

# மருதம்

## போரதீவுப் பற்று பிரதேச கலாசார விழா சிறப்புமலர்–2017

வெளியீடு

**கலாசாரப் பேரவை**
**பிரதேச செயலகம்,**
**போரதீவுப் பற்று,**
**வெல்லாவெளி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Poratīvu Pattu Cultural Association

# மருதம்

போரதீவுப் பற்று பிரதேச
கலாசார விழா சிறப்பு மலர்–2017

"தமிழர்தம் கலைகள் யாவும்
தரணியில் மிளிரச் செய்வோம்"

வெளியீடு

**கலாசாரப் பேரவை**
**பிரதேச செயலகம்,**
**போரதீவுப் பற்று,**
**வெல்லாவெளி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருதம்

போரதீவுப் பற்று பிரதேச
கலாசார விழா சிறப்புமலர்–2017


## நூல் தரவு:

| | | |
|---|---|---|
| பெயர் | : | " மருதம் " |
| வகை | : | கலை, இலக்கிய சிறப்பு மலர். |
| வெளியீடு | : | கலாசாரப் பேரவை, பிரதேச செயலகம், போரதீவுப் பற்று. |
| பதிப்பு | : | 2017 |
| பக்கங்கள் | : | 54 |
| பிரதிகள் | : | 250 |
| அச்சுப்பதிப்பு | : | மாருதி அச்சகம், களுதாவளை. |


**பொருளடக்கம் :** பக்கம்


முகவுரையும் வாழ்த்துச் செய்திகளும் i-vi
போரதீவுப் பற்று கலாசாரப் பேரவை 01
தமிழ் மொழி வாழ்த்து 03
போரதீவுப் பற்று கலாசார கீதம் 04
உழவன் எங்கள் தலைவன் 06
வாசிப்பு 08
நம் யார் 09
தூது நீ செல்லு 11
மஞ்சு 12
கிராமியப்பாடல் 19
பாடசாலையில் கலை வளர்ச்சி 21
சிறந்த தேசத்தைக் கட்டியெழுப்பும் இலக்கியம் மற்றும் கலை 23
போர்க்கால ஏர்ப்பாடல் 28
பொலிப்பாடல் 29
பெண்மனம் 31
தாய் 34
ஆட்டமும் சாட்டையடியும் 36
தண்ணிச்சோறும் கிழங்குக் கறியும் 38
கௌரவம் பெறும் கலைஞர்கள் 39




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முகவுரை

மட்டக்களப்பு வாவிக்கரையை அடிப்படையாக வைத்து எழுவான், படுவான் என்ற பிரதேச அமைப்புக்கள் பிரிக்கப்பட்டு உள்ளது. இப் பிரதேசங்களில் போரதீவுப்பற்று பிரதேசம் படுவான் கரைப் பிரதேசத்தினை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது.

இப் பிரதேசம், செந்நெல் வயல்களையும், காடு, மலை, ஏரிகள் போன்ற இயற்கை எழில் மிக்க வளங்களையும், கிராமியக் கலைகளையும், மரபுக்கலை போன்ற கலைத் தத்துவங்களையும் சிறந்த அனுபவம் மிக்க கலைஞர்களையும் கொண்டு விளங்குவதுடன் சிறந்த பண்பாட்டு விழுமியங்களோடு வாழும் மக்களையும் கொண்டு விளங்குகின்றது.

இங்கு கலையைக் கட்டிக் காக்கும் கலைஞர்கள் அடிப் படையாக வைத்து, போரதீவுப்பற்றுப் பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் கலாசார விழா மேலும் சிறப்புற "மருதம்" சஞ்சிகை வெளியிடப்படுவது மிகவும் வரவேற்கத்தக்கது. இத்தகைய சிறப்பு வாய்ந்த மருதம் சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்க கிடைத்ததையிட்டு மனம் மகிழ்கின்றேன்.

இப் பிரதேசத்தினை மையப்படுத்திய பல்சுவை ஆக்கங் களை உள்ளடக்கிய இம் மருதம் சஞ்சிகையானது அனைவரது இதயங்களையும் தொட்டு நிற்கும் என நம்புகின்றேன்.

இம் மலரும், கலாசார விழாவும் சிறப்படைய எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதுடன் இம் மலரினையும், விழாவினையும் சிறப்படையச் செய்யும் விழா ஏற்பாட்டுக் குழுவினருக்கும் எனது இதயம் நிறைந்த நல்வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றேன்.

**ஆர்.ராகுலநாயகி**
பிரதேச செயலாளர்,
போரதீவுப்பற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

போரதீவுப்பற்று வெல்லாவெளி பிரதேச செயலக கலாசார பேரவையால் இவ் வருடம் நடாத்தவுள்ள கலாசார விழாவின் பொருட்டு வெளிவரும் "மருதம்" மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு மனநிறைவடைகின்றேன்.

போரதீவுப்பற்று வெல்லாவெளி பிரதேச செயலகத்தின் இவ்வருட தொனிப்பொருளான "போரதீவுப்பற்று பிரதேச செயலகமும் மக்கள் வாழ்வியலும்" என்பதற்கமைய இப் பிரதேச மக்களின் வரலாறு, பண்பாடு, கலை இலக்கியம் சார்ந்த உணர்வுகள் வெளிப்படுத்தப்படும். இப்பணியுடன் நிலைபேறான கலாசார விழுமியங்கள் பேணும் நடவடிக்கைகளின் ஊடாக மாறிவரும் உலக நடப்புக்களிற்கேற்ப பொருளாதார முன்னேற்றத்தை கருத்திலெடுத்தல் சாலச்சிறந்தது.

மட்டக்களப்பின் படுவான்கரைப் பகுதியைச் சேர்ந்த வெல்லாவெளிப் பிரதேசம் வயலும் வயல் சார்ந்த இடங்களையும் கொண்டு பச்சைப்பசேல் என எழில் கொஞ்சும் பிரதேசம். அது மட்டுமல்லாமல் எண்ணிறைந்த வயல்களும் நீரோடைகளும் அதன் வளத்தையும் வனத்தையும் மேம் படுத்துவது நாம் யாவரும் அறிந்ததே. இத்தகைய வனப்பு மிகுந்த பிரதேச வாழ் கலைஞர்கள், அறிஞர்கள் அவர்களின் ஆற்றல்களையும் உள்ளக்கிடக்கைகளையும் வெளிக் கொணரும் ஆவணமாக இம் மருதம் மலர் அமையும் என்பது தெளிவு.

எனவே இம் மலர் வெளியீட்டுக் குழு முன்னின்று உழைத்த பிரதேச செயலாளர், உத்தியோகஸ்தர்கள், மலர் வெளியீட்டுக் குழுவினர் யாவருக்கும் எனது இதயம் கனிந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. மா. உதயகுமார்**

அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளரும்
மட்டக்களப்பு மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

இன்றைய நவீன உலகியல் அசைவானது இயந்திர மயமானதாக அமைகின்றமையை நாம் காணலாம். அன்றாட வாழ்வியலில் சமூகத்துடன் இயைந்து வாழ்தல் மற்றும் குழுச்செயற்பாடுகளில் சேர்ந்தியங்குதல் போன்ற பண்புகள் மிகவும் அருகி வருகின்றது. இவ்வாறான ஒரு கால சூழலில் எதிர்கால சந்ததியினரையும், இளம் சமுதாயத்தினரையும், நல்வழிப் படுத்துவதற்கான ஒரு பொறி முறையாக கலை, இலக்கியச் செயற்பாடுகள் அடையாளம் காணப்படுவதுடன், இத்தகைய செயற்பாடுகளை வீரியத்துடன் செயற்படுத்த வேண்டியது காலத்தின் தேவையாகும்.

இந்த வகையில் பிரதேச கலை இலக்கிய செயற்பாடுகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கும் நோக்கில் வருடாந்தம் இலக்கியப் போட்டிகளை நடாத்தி வெற்றியாளர்களையும் கௌரவிப்பதுடன், பிரதேசத்தின் கலை இலக்கிய செயற்பாடுகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கிய முதுகலைஞர்களும் கௌரவிக்கப்பட்டு வருகின்றமை பாராட்டுக்குரிய செயற்பாடாகும். இத்தகைய வீரியமான பண்பாட்டியல் செயற்பாடுகளால் எதிர்கால சந்ததியினர் ஆளுமை, சகிப்புத்தன்மை போன்ற பண்புமிக்கவர்களாக விளங்குவார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நீர்வளமும் நிலவளமும் மிக்க போரதீவுப்பற்று, வெல்லாவெளி பிரதேச செயலக கலாசார பேரவை 2017ம் ஆண்டுக்கான பிரதேச கலாசார விழாவை சிறப்பாக நடாத்துவதுடன், விழாவின் ஞாபகார்த்தமாக பல்வகை ஆக்கங்களை உள்ளடக்கிய "மருதம்" சிறப்பு மலரை வெளியிடவுள்ளமை பாராட்டுக்குரிய செயற்பாடாகும். பிரதேசம்சார் ஆவணப்படுத்தற் செயற்பாடுகள் அவசியப்படும் கால சூழலில் "மருதம்" காத்திரமான ஆக்கங்களுடன் வெளிவரவேண்டும் என வாழ்த்துவதுடன், 2017ம் ஆண்டுக்கான பிரதேச கலாசாரவிழா சிறப்புற நடைபெறவும் இச் செயற்பாடுகளில் தம்மை அர்ப்பணித்து காத்திரமான பங்களிப்பை வழங்கிய பிரதேச செயலாளர், கலாசார உத்தியோகஸ்தர், பிரதேச கலாசார பேரவையினர் மற்றும் விழாக்குழுவினருக்கு எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி. V.ரவீந்திரன்**

மாகாணப் பணிப்பாளர் - பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
கிழக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

கலைகளையும் கலைஞர்களையும் வெளிக்கொணரும் களமாகவும் கலை, காலாசார, பண்பாட்டு விழுமியங்களை ஆவணப்படுத்தும் ஒன்றாகவும் கலாசார விழாவும் "மருதம்" மலர் வெளியீடும் அமைந்திருக்கின்றது.

இம் மலரின் பெயரினைப் போல போரதீவுப்பற்று பிரதேச மண்ணும் மக்களின் மனங்களும் மருதமாய் திகழ்கின்ற பல்வேறு பாரம்பரியங்களும் இன்னும் இம்மண்ணில் உயிர்ப்போடிருக்கின்றன. தொன்மைசார் பண்பாட்டு மரபுகள், சடங்குகள், கைவினை கலையாக்கங்கள் மற்றும் கிராமிய கலைகள் என்பனவும் இம் மண்ணின் பெருமைகளை நினைவுபடுத்தி நிற்கின்றன.

ஒரு சமூகத்தின் கலைகளையும் கலைஞர்களையும் அவர்களின் படைப்புக்களையும் ஆவணப்படுத்த வேண்டியது அச் சமூகத்தின் இருப்புக்கு அவசியமானதொன்றாகும். போரதீவுப் பற்று கலாசாரப் பேரவையினரால் வெளியிடப்படும் "மருதம்" சிறப்பு மலரானது இப்பணியில் கணிசமான பங்கினை நிறைவேற்ற எத்தனிக்கின்றது.

இம் "மருதம்" மலர் வெளியீட்டுக்காக உழைத்த கலாசார பேரவையினருக்கும் கலாசார உத்தியோகஸ்தகும் மலர் குழுவினருக்கும் மற்றும் ஆக்கங்களை தந்துதவிய படைப்பாளர்களுக்கும் எனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்வதோடு கலாசார விழாவும் "மருதம்" மலர் வெயியீடும் சிறக்க என் மனப்பூர்வமான வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. சி. புவனேந்திரன்**
உதவி பிரதேச செயலாளர்
பிரதேச செயலகம்,
போரதீவுப் பற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

போரதீவுப்பற்று கலாசார பேரவை கலாசார விழாவினையும், அத்தோடு தொடர்புடையதாக மருதம் சிறப்பு மலரினையும் வெளீட்டு பெருமை பெற்றுள்ள ஒன்றாக உள்ளது.

இவை இப் பிரதேச கலாசார பண்பாடு விழுமியங்களைத் தூண்டி விடுவதோடு எழுத்தாளர்களையும் கலைக் காவலர்களையும் வாசகர்களையும் கலைக் காவலர்களையும் வாசகர்களையும் கூட ஊக்கப்படுத்தி விடுபவையாகவும் உள்ளன.

போரதீவுப்பற்று பிரதேசம் நீண்ட வரலாறு கொண்டது. கண்டி இராசதானி காலத்தில் மட்டக்களப்பின் மைய விசையாகத் திகழ்ந்து அண்மைய காலத்தில் புகழ்பூத்த வரலாற்று பேராசிரியர்களால் இப் பிரதேசம் பற்றிய வரலாற்றுச் சான்றிதழ்கள் வெளிக்கொணரப் பட்டுள்ளமையும். மேற்படி கருத்துக்களை உறுதிப்படுத்தி நிற்கின்றன.

இவ்வாறான பெருமைமிகு பிரதேசத்தில் நடைபெறுகின்ற கலாசார பெருவிழா வெற்றியடையவும் மருதம் சிறப்புமலர் புதுமணம் கமழவும் இவற்றோடு தொடர்புபட்ட அனைவரும் நீடிய ஆயுளும், நிறைந்த செல்வமும் பெற்று வாழவும் உளம்நிறைந்த வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

**திரு. ச. கணேசமூர்த்தி** (அதிபர்)
கலாசார பேரவை உறுப்பினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விளக்கவுரை

எமது போரதீவுப்பற்று பிரதேசமானது பாரம்பரிய கலைத்தொன்மை வாய்ந்த ஒரு பிரதேசமாகும். இங்கு நாட்டாரியல் அம்சங்கள் செறிந்து விளங்கும். இங்கும் நாட்டுப்புற கதைகள், நாட்டுப்புற பேச்சு, நாட்டுக்கூத்து, கிராமியக் கலைகள் என்பவற்றைக் கொண்ட ஒரு கலைப்பிரதேசமாகவே இப் பிரதேசம் அமைகின்றது.

இப் பிரதேசத்தின் கலைப் பண்புகளை வெளிக் கொணரும் ஒரு அம்சமாகவே கலாசார விழா அமைகின்றது. இதில் பல்சுவைத்தன்மை இடம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. இவ் விழாவிலும் கலைஞர் கௌரவம், நூல் வெளியீடு என்பன இடம்பெறுவது விசேட அம்சமாகும்.

பிரதேச செயலாளரின் தலைமையின் கீழ் கலாசார பேர வையின் ஆலோசனைகளுடன் இந்நிகழ்வுகள் அனைத்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதை குறிப்பிட விரும்புகின்றேன். இதில் வெளிவரும் மருதம் சிறப்பு மலரின் உள்ளடக்கமானது எமது பிரதேசத்தினை மையப்படுத்திய ஆக்கங்களை பிரதேச எழுத்தாளர்ளிடம் இருந்து பெறப்பட்டதாகும்.

இவ் வருடம் இறுதியான காலமாக இருந்தாலும் தற்போது இப் பிரதேசத்தினை நிர்வகிப்பதற்கு இடமாற்றம் பெற்றுவந்த பிரதேச செயலாளர் துரிதமாக முன்னெடுப்புக் களையும் இவ்விழாவிற்குரிய ஏற்பாடுகளையும் பிரதேச கலாச்சார பேரவையின் ஒத்துழைப்புடனும் பிரதேச செயலக உத்தி யோகஸ்தர்களின் ஒத்துழைப்புடனும் முன்னெடுத்து வெற்றி கரமாக நிறைவேற்றியுள்ளார் என்றால் மிகையாகாது.

எனவே 2017ம் ஆண்டு மருதம் சிறப்பு மலரின் வெளிவரும் பல்சுவை ஆக்கங்களும் வாசகர் மத்தியில் இடம் பிடிக்கும் என நம்புகின்றேன்.

- நன்றி -

**திரு. ச. சோமசுந்தரம்**
(கலாசார உத்தியோகஸ்தர்)
கலாசார பேரவை செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போரதீவுப் பற்று கலாசாரப் பேரவை - 2017



இடமிருந்து வலம் (நிற்போர்) : த.சேரலாதன், க.சோமசுந்தரம், க.சுந்தரம்பிள்ளை, மு.பேரின்பராசா, சி.உதயமலர், இ.கலைச்செல்வன், ம.பக்தகௌரி, தே.நடராசா, த.ரமீஸ்குமார், ஆ.புட்கரன்

இடமிருந்து வலம் (இருப்போர்) : க.தணிகாசலம், ஏ.எம்.சமரசேகர, ச.கணேசமூர்த்தி , சி. புவனேந்திரன், ஆர். ராகுலநாயகி வ.நாகேஸ்வரன், ச.சோமசுந்தரம், சு.உதயகுமார், இ.விநாயகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரதீவுப் பற்று பிரதேச கலாசாரப் பேரவை

தலைவர் : ஆர். ராகுலநாயகி (பிரதேச செயலாளர், போரதீவுப் பற்று)

உப தலைவர் : திரு.சி. புவனேந்திரன் (உதவி பிரதேச செயலாளர், போரதீவுப் பற்று)

செயலாளர் : திரு. ச.சோமசுந்தரம் (கலாசார உத்தியோகஸ்தர், போரதீவுப் பற்று)

பொருளாளர் : திரு.வ.நாகேஸ்வரன் (கணக்காளர், போரதீவுப் பற்று)

உப செயலாளர்: திரு. ச.கணேசமூர்த்தி (அதிபர், மட்/பட்/வெல்லாவெளி கலைமகள் வித்.)

**உறுப்பினர்கள்:**

திரு.ஆ.மு.சி.வேலழகன் (கலாசார பேரவை உறுப்பினர்)

திரு.க.தணிகாசலம் (கலாசார பேரவை உறுப்பினர்)

திரு.சு.உதயகுமார் (அதிபர், கலாசார பேரவை உறுப்பினர்)

திரு.ஆ.புட்கரன் (அதிபர், கலாசார பேரவை உறுப்பினர்)

திருமதி.மலர் சிவராசா (கலாசார பேரவை உறுப்பினர்)

திரு.க.சோமசுந்தரம் (கலாசார பேரவை உறுப்பினர்)

திரு.ஏ.எம்.சமரசேகர (கலாசார பேரவை உறுப்பினர்)

திரு.க.மகாலிங்கம் (கலாசார பேரவை உறுப்பினர்)

திரு.இ.விநாயகம் (கலாசார பேரவை உறுப்பினர்)

திரு.பெ.உதயகுமார் (அபிவிருத்தி உத்தியோகஸ்தர, கலாசார பேரவை உறுப்பினர்)

திரு.ஆர்.மயூரன் (கிராம சேவை உத்தியோகஸ்தர், கலாசார பேரவை உறுப்பினர்)

திரு.இ.கலைச்செல்வன் (அபிவிருத்தி இணைப்பாளர், கலாசார பேரவை உறுப்பினர்)

திரு.தே.நடராசா (கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்தர், கலாசார பேரவை உறுப்பினர்)

திரு.த.சேரலாதன் (ஆசிரியர், கலாசார பேரவை உறுப்பினர்)

திரு.த.ரமீஸ்குமார் (ஆசிரியர், கலாசார பேரவை உறுப்பினர்)

திருமதி. ம.பக்தகௌரி (கலாசார அபிவிருத்தி உத்தி., கலாசார பேரவை உறுப்பினர்)

செல்வி சி.உதயமலர் (கலாசார அபிவிருத்தி உத்தி., கலாசார பேரவை உறுப்பினர்)

திரு.எஸ்.நாகேந்திரன் (கலாசார பேரவை உறுப்பினர்)

திரு.க. சுந்தரம்பிள்ளை (கலாசார பேரவை உறுப்பினர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலர்க்குழு:

திரு. ச.சோமசுந்தரம் (கலாசார உத்தியோகஸ்தர், கலாசார பேரவை செயலாளர்)

திரு.க.கணேசமூர்த்தி (அதிபர், கலாசார பேரவை உறுப்பினர்)

திரு.ஆ.புட்கரன் (அதிபர், கலாசார பேரவை உறுப்பினர்)

திருமதி.மலர் சிவராசா (கலாசார பேரவை உறுப்பினர்)

திரு.இ.கலைச்செல்வன் (அபிவிருத்தி இணைப்பாளர், கலாசார பேரவை உறுப்பினர்)

திரு.த.நடராசா (கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்தர், கலாசார பேரவை உறுப்பினர்)

திரு.த.சேரலாதன் (ஆசிரியர், கலாசார பேரவை உறுப்பினர்)

திரு.த.ரமீஸ்குமார் (ஆசிரியர், கலாசார பேரவை உறுப்பினர்)

திருமதி.ம.பத்தகௌரி (கலாசார அபிவிருத்தி உத்தியோகஸ்தர், கலாசார பேரவை உறுப்பினர்)

## நிகழ்ச்சிக்குழு:

திரு. க.தணிகாசலம் (கலாசார பேரவை உறுப்பினர்)

திரு.சு.உதயகுமார் (அதிபர், கலாசார பேரவை உறுப்பினர்)

திரு.இ.வினாயகம் (கலாசார பேரவை உறுப்பினர்)

திரு.பெ.உதயகுமார் (கலாசார பேரவை உறுப்பினர்)

செல்வி.சி.உதயமலர் (கலாசார அபிவிருத்தி உத்தியோகஸ்தர், கலாசார பேரவை உறுப்பினர்)

## நிதிக்குழு:

திரு.வ.நாகேஸ்வரன் (கணக்காளர், கலாசார பேரவை உறுப்பினர்)

திரு. ச.சோமசுந்தரம் (கலாசார உத்தியோகஸ்தர், கலாசார பேரவை செயலாளர்)

திரு.த.நடராசா (கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்தர், கலாசார பேரவை உறுப்பினர்)

திரு.ச.கணேசமூர்த்தி (அதிபர், கலாசார பேரவை உறுப்பினர்)

திரு.இ.கலைச்செல்வன் (அபிவிருத்தி இணைப்பாளர், கலாசார பேரவை உறுப்பினர்)

திரு.எஸ்.நாகேந்திரன் (கலாசார பேரவை உறுப்பினர்)

விழா மேற்பார்வை : ஆர். ராகுலநாயகி (பிரதேச செயலாளர், போரதீவுப் பற்று)

விழா இணைப்பாளர்: ச.சோமசுந்தரம் (கலாசார உத்தியோகஸ்தர், போரதீவுப் பற்று.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வானமளந்த தனைத்து மளந்திடு
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி யோங்க
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!
வான மளந்த தனைத்தும் அறிந்திடு
வளர்மொழி வாழியவே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரதீவுப் பற்று கலாசார கீதம்

## பல்லவி

ஆடுவோமே கவி பாடுவோமே
ஆனந்தம் கொண்டோமென்று கூடுவோமே
தேடுவோமே செல்வம் அனைத்தும் பெற்று
சீரான வாழ்வினை நாடுவோமே

## சரணங்கள்

போரதீவுப் பற்றென்னும் பொன்னான நாட்டினை
போற்றி நிற்போம் என்றும் நாமே
சீரான திருத்தலங்கள் நிறைந்ததெம்
செல்வத் திருநாடே என்போம்

நீர்வளம் நிலவளம் நிறைந்த பிரிவிது
நெல்வயல் நீர்குளம் மலிந்ததன்றோ!
சீர்பெறும் கவிமான்களும் கவிஞர்
பெருமக்கள் செல்வம் உடையதன்றோ!

எங்கும் நிறைந்த மருத நிலத்தினில்
இடையிடையே மக்கள் வாழ்விடமாம்
பங்கமில்லாப் புகழ் பழுகாமம் தன்னிலே
பாங்குடன் அமர்ந்துள்ளாள் துரோபதைத்தாய்

போரதீவெனும் பேரூர் அதனிலே
பிரியமாய் அமர்ந்துள்ளாள் காளியம்மாள்
அரிய புகழ் முனைத் தீவதன் பக்கலிலே
அமர்ந்து வினாயகர் அருள் பெறுமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டைப் புகழ்பெறு பைந்தமிழ்க் காவலன்
பார்புகழ் முருகேசன் வாழ்விடமாம்
மண்டூர் எனுந்தலம் மண்ணுள்ளோர் யாவரும்
வந்து தரிசனம் செய்திடுவர்.


கோயில் போரதீவு எனும் பதியிலே
கோவில் கொண்டிருப்பவன் முருகன்
தாவில் வெல்லாவெளித் தலத்தினில் மாரித்தாய்
அருள் பாலிக்கின்றார் அறிந்திடுவீர்

திக்கோடை தும்பங்கேணிக் கிராமங்கள் தோறும்
தெய்வத் திருவருள் பெற்று
மிக்கதோர் கிராமிய கலைகளும் அங்கே
மேம்பட்டு நிற்பதை மதிப்போமே

எங்கள் கிராமங்கள் அனைத்திலும் தமிழர்தம்
இன்தமிழ் செல்வங்கள் நிறைந்து
மங்கலமான நல் நாட்டுக் கூத்துடன்
நாடகம் கும்மி கோலாட்டம்


கரக ஆட்டம் கொம்பு முறித்தல்
குரவை ஒலியுடன் பெண்களின் கூட்டம்
பரமனருள் பெற்ற போரதீவுப் பற்று
பாரினில் வாழிய வாழியவே

வாழியவே! வாழியவே! வாழியவே!
வாழியவே! வாழியவே! வாழியவே!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உழவன் எங்கள் தலைவன்



கார் ஓட்டும் ஜமின் கூட
ஏர் ஓட்டும் உழவனவன்
சீர் ஓட்டம் நின்றுவிட்டால்
சீரழிவான் உண்மை இது

வாழ்வாங்கு வாழ்வதற்கு
பார் கண்ட உழவனன்றி
வேறிங்கு ஏதுமில்லை
விளம்பும் உண்மை பொய்ப்பதில்லை

நாம் கண்ட விவசாயி
நாடே போற்றும் தொழிலாளி
ஊர் வாழ ஏரோட்டும்
எங்கள் குல தெய்வம் அல்லோ



பூமி தன்னை புனிதமாக
சாமி போல மதித்து மண்ணை
ஆவி சோர உழைத்து மக்கள்
பாரில் வாழ உயர்த்தும் தோழன்

சேற்றினிலே கால் வைத்து
ஊன் உடம்பை கூனாக்கி
சோற்றின் சுவை நாம் அறிய
சோர் வின்றி வேலை செய்வான்



கோட்டுப் போட்ட கவுனர் முதல்
கோட்டை ஆளும் மன்னர் வரை
ரெட்டை மாடு பூட்டி உழுதும்
உழவன் இன்றி உயர்வா கொண்டார்.

வரப்புயர என்று அன்று
வாழ்த்தி நின்ற அன்னை ஔவை
தமிழ்பாவின் தலைவனாவான்
தரணி ஆளும் எங்கள் உழவன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவணத்தை கட்டி வயலில்
குடல் இல்லா வயிற்றோடு
கூன் விழுந்த உடல் கொண்டு
ஏன் செய்தான் விவசாயம்

சிரிப்பதற்கு ஒன்றும் இல்லை
சிந்திக்க வேண்டும் இங்கே
ரசிக்கின்றோம் கலைகள் கண்டு – யார்
நினைக்கின்றோம் உழவன் தன்னை

வேறு
பந்தியிலும் முந்தி ஒரு இடம் வேண்டும் இவனுக்கு
அரச அவையினிலும் முதல் அமர்வு கிடைக்க வேண்டும் இவனுக்கே
சந்தியிலும் சாலையிலும் இவன் பெருமை மொழி வேண்டும்
சாதித்த பெருமகனின் சரித்திரமும் இனி வேண்டும்

ஆண்டுக்கு ஒருமுறை அன்பனுக்கு விழா வேண்டும்
ஆலயங்கள் தோறும் இவன் ஆசீர்வாதம் கூறல் வேண்டும்
பாடத்தில் இவன் புகழின் புது செய்யுள் வரல் வேண்டும்
பள்ளியிலே நாம் அறியும் புதுப் பாடம் வரவேண்டும்

நாட்டுக்காய் பாடுபடும் நம் நாயகனின்
வீட்டுக்கு நல்அரசுத் திட்டம் வேண்டும்
கூட்டுக்குள் அகப்பட்ட குயிலாய் நிற்கும் – அவன்
பூட்டுடைத்து புது வாழ்வு கொடுத்தல் வேண்டும்

இத்தனையும் இவனுக்காய் செய்யாவிட்டால்
இனியதொரு விவசாயம் பாரில் சாகும்
விவசாயம் இல்லாதோர் பூமி ஆங்கே
விடிவெள்ளி காணுமுன்பே அழிந்தே போகும்

உரைக்கின்றேன் கவிதையல்ல உண்மை வரிகள்
கொதிக்கின்ற உணர்வுகளின் உண்மைக் குமுறல்
மதிக்கின்றேன் உழவன் மகன் பாதம் பணிந்து
அர்ப்பணித்தேன் அவனுக்கே இச் செய்யுள் பாவை

**கோ.கணேஷ்**
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பு!

கண்டதும் கற்பவன் பண்டிதன் ஆவான்
காதால் கேட்பவன் மேதையாய் ஆவான்
வாழ்க்கையை உணர்ந்தவன் ஞானியாய் ஆவான்
நூலைத் தேடுவோன் புலவனும் ஆவான்

பேசிப்பார் சமாதானம் கிடைக்கும்
யோசித்துப்பார் தீர்வு கிடைக்கும்
ரசித்துப்பார் அழகு தெரியும்
வாசித்துப்பார் புது உலகம் தெரியும்

சொன்னது சொன்னபடி இருக்க
பார்த்தது பாரத்தபடி இருக்க
கேட்டது கேட்டபடி இருக்க
வாசித்தது மாத்திரம் ஞாபகத்தில் வந்ததே

எண்ணங்கள் உருவாகி உயர வைக்கும்
தன்னம்பிக்கை என்றும் ஓங்க வைக்கும்
நேர்மை கொண்டது நிலைத்து நிற்கும்
நெஞ்சில் துணிவோடு- தலை நிமிர்ந்து வாழும்

சொற்களஞ்சியம் வேண்டுமா?
ஆக்கத் திறன் வேண்டுமா?
மனிதனே நீ மனிதனாக செயற்பட வேண்டுமா?
வாசித்துப்பார் உனக்கு இவை கிடைக்கும்!

நிகழ் காலத்தில் நிலைத்து நிற்பதற்கும்
எதிர் காலத்தில் செம்மையோடு வாழ்வதற்கும்
என்றென்றும் துல்லியமாய் செயற்படுவதற்கும்
வாசிப்பே எமக்கு அவசியம்! அவசியம்!

**செல்வி க.ரஞ்ஜனா**
வினாயகர் வீதி, கோவில்போரதீவு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் யார்?

**ஆ.மு.சி.வேலழகன்**

இவ்வுலகிலே பிறந்துள்ள அனேகமானோர் தங்களையும் ஏனையோரையும் மனிதர்கள் என்றே எண்ணுகின்றனர். ஆனால் இவர்களுடைய எண்ணப்படி மனிதர்களாகப் பிறந்தவர்கள் எல்லாம் மனிதர்தானா? நினைப்பவர்களை பக்தர்களென்றும் கடவுளைக் கண்டு தெளிந்தோரைச் சித்தர்கள் என்றும் கூறுவதுண்டு. இந்தப் பக்தர்களிலும் இறைவனைக்காண நினைப்பவர்களிலும் இருவகையினர் உண்டு.

ஒருவகையினர் இறைவனைக் கண்டு அவனிடம் தங்களுக்கு இந்த உலகில் வாழ நீண்ட ஆயுளும் நிலையான செல்வமும், கல்வியும், பதவியும், புகழும், பெருமையும் வேண்டுமென்றே கடவுளைக் காணவும் வரம் கேட்கவும் என எண்ணி அலைவர். ஆனால் இவர்களோ இறைவனை எக்காலத்திலும் காணமாட்டார்கள்.

ஏனைய இரண்டாவது வகையினர் தங்கள் ஐம்புலன்களையும் கட்டுப்படுத்தி "பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு" வழியிலே சென்று இறைவனைக்கண்டு தெளிந்து உலகப் பற்றினை விட்டொழித்துச் சித்தி பெற்ற சித்தர்களாவர். இந்தச்சித்தர்கள் அணுவைப் போல சிறிதாதல்(அனிமா), இமய மலை போல் பெரிதாதல்(மகிமா), காற்றுப் போல் இலேசாதல் (இலகுமா), பொன்போல் பளுவாதல் (கரிமா), தம்வசப்படுத்தல் (வசித்துவம்), கூடு விட்டுக் கூடுபாய்தல் (பிரகாமியம்), விரும்பியதனைத்தையும் அடைதல், செய்து முடித்தல் (ஈசத்துவம்) என்ற எட்டுவகை பெரும் பேறுகளைப் பெறக்கூடியவர்கள் தான் சித்தர்களாவர். இவர்கள் மனிதர்களல்ல.

மேற்குறிப்பிட்டவகையில் சுயநலமுள்ள வேடதாரிகளான பக்தர்களுக்குமிடையில் இன்னும் இருவகையினர் இருக்கின்றனர். இவர்களிலும் ஒருவகையினர் இல்லற இன்பத்தினை ஏற்று இல்வாழ்க்கையில் இணைந்து தாமும் வாழ்ந்து தம்மைப் போன்ற ஏனையவர்களும் வாழ வழிவிட்டும் வாழவழி காட்டியும் உதவி ஒத்தாசைகள் செய்தும் வாழ்ந்து வரும் மனிதநேயமும் ஈவு இரக்கமும் அன்பும் பாசமும் கொண்டோரை இல்லறத்தான் என்போம்.

மற்றுமோர் வகையானவர்கள் மனிதனை மனிதன் வஞ்சித்தும் திருடியும் அடித்தும் வெட்டியும் கொலை செய்தும் வல்லுறவு புரிந்தும் பணத்தையும் உடல் பலத்தையும் அரச உதவியினாலும், அடியாட்களின் உதவியினாலும் தான் நினைத்ததனைத்தையும் குறுக்கு வழியில் நிறைவேற்றி இன்புறுமவர்களைக் கயவர்கள் என்றும் கூறுவர்.

இதற்கும் உண்மைச் சான்றாக பெருமான் திருவள்ளுவர் அவர்களும் தனது பார்வையில்

"மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாங்கண்டதில்" என்றும்
"தேவர் அனையர் கயவர் அருந்தாம்
மேவன செய்தொழுகலான்"

என்றும் கூறுகின்றார். ஆம் மனிதவடிவிலே தேவர்கள், முனிவர்கள், சித்தர்கள், ஞானிகள், பக்தர்கள், இல்லறத்தார், பிரமச்சாரி, துறவி, வறியோன் என்ற பலரும் மனித உருவிலே இருப்பதனால் நாம் இவர்கள் அனைவரையும் மனிதர்கள் தான் என்று சொல்ல முடியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் கூறுவதானால் உலகையும், உலகில் உள்ள செல்வங்களையும் கண்டறியவும் கண்ட பொருட்களை சுரண்டிக் கொண்டு கண்டம் விட்டுக் கண்டம் கடல் பாதை தேடிதங்கள் நாடுகளுக்கு எடுத்துச் செல்லவுமெனப் பயணித்த கடலோடிகளான ஜேம்ஸ்குக், வாஸ்கோடகாமா, மெகல்லன், கொலம்பஸ் (1451-1506) ஆகியோரையும் நாம் மனிதர்கள் என்று கூறலாமா?

உலகைக் கூறு போட்டு அங்கெல்லாமுள்ள தங்கம், வைரம் மாணிக் கம், முத்து, இரும்பு, செம்பு, பித்தளை, றபர், தேயிலை, யானைத்தந்தம், மயில்தோகை, வாசனைப் பொருட்கள் போன்றவற்றைத் திருடிச் செல்லவும் தங்கள் நாடுகளில் உற்பத்திக் கருவிகளினால் இயந்திரங்களினால் மலைபோல் செய்து குவிந்த ஆயுதங்களையும் சந்தைப் பொருட்க ளையும் மதுவகைகளையும் சந்தைப் படுத்த சந்தை வாய்ப்பை உருவாக்கி எமது நாடுகளுக்குள் ஊடுருவி அமைதியாய் வாழ்ந்த எம்மினத்தாரிடையே இனம், மொழி, சமயம் என்ற சுலோகங்களைப் புகுத்தி வெற்றியை ஏற்படுத்தி போராடத் தூண்டி ஆயிரக் கணக்கான லெட்சக் கணக்கான மக்களைக் கொன்றொழிக்கக் காரணமான ஏகாதிபத்தியவாதிகளான, சர்வாதிகரிகளான ஏகாதி பத்திய வெறி கொண்ட ஆட்சியாளர்களையும் அவர் களின் அடிவருடிகளான தூதுவர் களையும் ஒற்றர்களையும் நாம் மனிதர்கள் என்று கூறலாமா?

இன்றும் கூட ஆடம்பரப் பொருட்களையும் மதுபானங்களையும் கிறிக்கட் என்ற ஓர் மாயையையும், கையடக்கத் தொலைத்தொடர்புச்சாதனங்களையும் இறக்குமதி செய்து இளைஞர் யுவதி களைத் தவறான பாதையில் இட்டுச் செல்வதோடல்லாமல் நாளுக்கு நாள் பல உயிர்களைப் பலியிட வழிவகுத்தோரையும் மனிதர்கள் என்று எண்ணலாமா? சொல்லலாமா?

எனவே மனித இனமானால் மனித இனத்திற்கான பண்பு நாகரிகம், நல்ல பழக்க வழக்கம் பாச பந்தம் நீதி, நியாயம், மனச்சாட்சி என்ற இன் னோரன்ன அம்சங்கள் கொண்ட ஒரு பிறவிதான் மனிதம். மனித இனம் என்று பொருட்படும். அவை அத்தனையுமில்லை யென்றால் கல், மரம், செடி, கொடி விலங்கு என்ற பல பொருள் படவே இலக்கணம் மாறுபடும். மனிதன் என்பவன் உடல் வருந்தி உழைத்தும் பிறர் பொருளைச் சுறண்டாமலும் போதுமென்ற மனப் பக்குவத்தோடே பிரம்மச்சாரி, துறவி, வறியோன் ஆகிய முத்தரத்தாருக்கும் கொடுத்துதவும் இல்வாழ்வோன் மட்டுமே மனிதனாவான். இதைத்தான் பொய்யா மொழியாரும்

**"இயல்பினானர் இல்வாழ்க்கை வாழ்பவன்**
**என்பான்**
**முயல்வாருள் எல்லாம் தலை"**

என்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூது நீ செல்லு....

கூழாவடியான்

தோட்டத்துப் பூ மதுவை சுவைத்த வண்டே
சொல்கின்றேனென் கவலை நீயும் சென்று
வாட்டமுறு மென் நிலையைக் கண்டேனென்று
காத்திருக்கும் கன்னியிடம் நீ போய்ச் சொல்லு

தங்கநிற அவள் வதன மென்னையின்று
சொந்த முடனிங்கு வந்து சுவைப்பதற்கு
எந்த வித தடையுமில்லை என்று நீயும்
சென்றவள் பால் இங்கிதமா நீ போய் சொல்லு

மாங்கனியை யொத்த அவள் கன்னமிரு
மயிலொத்த பயிலும் நடை யழகு
மீன் போன்ற அழகு விழி இரண்டுடையாள்
மின்னலை யொத்த அவளிடை வதனம்



உள்ளத்தேயுள்ள கோட்டை உடைந்திடாது
ஊனுறக்க மில்லாது மடிந்திடாது
வெள்ளத்தாலள்ளுண்டு போய் விடாது
விரைவாகவேயவளை வர நீ சொல்லு

ஈரெட்டு ஆண்டுகளாய் மலர்ந்த காதல்
இன்னுமா? முதிர்வதற்கு காலமுண்டு
வாவென்று காலன் எனை அழைக்கும் முன்னே
வந் தெந்தனின்பமதை அகற்றச் சொல்லு

காத்திருந்த விழியிரண்டும் பூத்து நோவ
காதலென்ற வேதனையைக் கண்டே னென்று
மாத்திரத்தில் அவளிடத்தில் நீயும் சென்று
மறுக்காமல் என்னிடத்தில் வரவே சொல்லு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஞ்சு

**இராசையா கலைச்செல்வன்**
அபிவிருத்தி இணைப்பாளர்,

கண்ணாச்சிப்பாட்டியின் வீட்டிற்கு முதல் நாள் இரவுதான் பூனை வந்திருக்க வேண்டும் ஏனெனில் அன்று இரவு முழுவதும் மேசையின்மேல் 'தொப் தொப்' என்று ஏதோ விழும் சத்தமும் சமயலறைப் பாத்திரங்களும் கரண்டிகளும் உருளும் ஓசையுமாக இருந்தன கிழவிக்கு என்ன தென்று புரியவில்லை. நடுச்சாமமாதலால் தனியே எழுந்துபோய் பார்க்கவும் அலுப்பு. எலியாக இருக்குமென்று பேசிக் கொண்டே மறுபடியும் தூங்கலானாள்

மறுநாள் அதிகாலையில் கிழவி திருப்பள்ளியெழுச்சியும் சிவன் தோத்திரங் களும் சொல்லி முடித்துவிட்டு எழுந்த பொழுது பூனை குறுக்கே ஓடிற்று "அட தரித்திரமே! நீதானா இரவு முழுவதும் கொட்டம் அடித்தாய்? போதாக்குறைக்கு முதல் முதல் உன் முளிப்புதானா? என்ன ஆபத்து வரப்போகிறதோ?" என்று நொந்து கொண்டாள்.

அதற்குப்பிறகு பகல் முழுவதும் பூனை கண்ணில்படவில்லை. அன்று கிழவிக்குக் கறிகாய் நறுக்கும் பொழுது கத்திகூடக் கையில்படவில்லை.'இப்படி சாஸ்திரம் பொய்யாகுமா? என்று கிழவி யோசித்துக் கொண்டிருந்தாள்.

இரவு வந்தது. பலகாரத்திற்குப் பால்கொழுக்கட்டை செய்து சட்டியில் மூடிவைத்துவிட்டு சுவாமி கும்பிடச் சென்றாள். பலகாரத்திற்குக் காவலாகப் பேரன் பிரபாவையும் அவன் தங்கை காயாவையும் நியமித்தாள். சிறிது நேரம் சென்றது. பிரபா தெய்வகீர்த்தனை சொல்லிக் கொண்டிருந்தான்.

அண்ணனுடைய உத்தியோகத் தையும் சேர்த்துப் பார்த்துவந்த காயா அப்படியே கூடத்தில் தூங்கிப் போய் விட்டாள்.

உள்ளே வெற்றிலை வட்டா உருண்டு விழுந்தது. அந்தச் சத்தத்தைக் கேட்டுத் திடுக்கிட்டு பிரபா உள்ளே ஓடினான். பூனைக்குட்டி அந்தர்த்தான மாகிவிட்டது. பாத்திரத்தில் கொஞ்சம் பால் குறைந் திருந்தது. கிழவி வந்து அடி அடிக்கப் போகிறாளே எனப்பயந்து, வட்டாவை மறுபடியும் மூடிவைத்து விடலாமென்று கையிலே எடுத்தான். சமயத்தில் கிழவி திரும்பிவந்து விட்டாள். ஒரு வினாடிக்குள் விஷயம் விளங்கி விட்டது. பாட்டியின் முள்ளந்தண்டு வசவுகளும் அழகாய்ப் புறப்பட்டன. அப்புறம் பிரபாவுக்கு இரண்டு அறை. தூங்குமூஞ்சி காயா நன்கு வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தபொழுது வீட்டு விட்டத்தின் மீது "மியா மியா" என்று கத்திக்கொண்டிருந்த பூனைக்குட்டியைப் பார்த்தாள். தன் நிலைமையைப் பார்த்து இரங்குவது போல கூவிய பூனைக் குட்டிக்கு மஞ்சு என்ற அன்புப் பெயர் சூட்டினாள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்பவனைச் சுயேச்சையாய் விடவேண்டியது பெண் தர்மம் என்றும் அதையெல்லாம் மறந்து தூங்கிப்போன காயா கணவன் வீட்டிற்குப்போய் நல்ல பெயர் வாங்கப்போவதில்லை என்றும் பிரபா எண்ணிக் கொண்டிருந்தான்.

காயா நினைத்தாள் "எனக்குத் தான் தூக்கம் தலை சுற்றியடித்ததை இவன் பார்த்தானா? நானும் சொன்னேனே. கைகொடுக்கும் நேரத்தில் நெட்டுருச் செய்ய வெண்ணியதை ஒருயுகம் வரையில் செய்தால் முதல்வன் மக்குப் பையன்! சமையலறையிலாவது விளக்கை வைத்துக் கொண்டு வாசிக்கலாகாதா? அதையெல்லாம் விட்டுவிட்டுக் கிழவிக்குத் தூபம் போட்டு எனக்கு அடிவாங்க வைத்தானே சனியன்! தொலைவான்! இவனுக்குப் படிப்பு வருமா?"

மஞ்சுவும் அன்று முதற்கொண்டு அங்கேயே வாடிபோட்டுவிட்டது. ருசி கண்ட பூனை விடுமா? அங்கே இங்கே பாட்டி போயிருக்கையில் நெய்யைத்தின்று விடுவது. பாலைக்குடித்து விடுவது. நைவேத்தியத்தைத் தொட்டுவிடுவது இப்படியெல்லாம் பூனைக்குட்டிக்குத் தெரிந்த அவ்வளவு விஷயமும் செய்தது.

ஒருநாள் சமையலறையில் மஞ்சு தூங்கிக் கொண்டிருந்தது. கண்ணாச்சிப் பாட்டி அதைப்பார்க்கவில்லை. "இந்தாடா தேயிலை" என்று கிளாசை வைத்து விட்டுக் காசித்தும்பைப் பூப்பறித்துவரச் சென்றாள். பிரபா உடைகள், பாடப்புத் தகங்கள் இவை களை ஒழுங்குபடுத்தி விட்டு வருமுன் தேத்தண்ணியில் பாதிக்குமேல் காணாமால் போய்விட்டது. பாட்டியிடம் போய்ச் சொன்னான் "உனக்கு நன்றாய் வேண்டும்!" என்று கிழவி ஆசீர்வதித்தாள். பிரபாவுக்கு வந்த ஆத்திரத்திற்கு அளவில்லை. அங்கிருந்த சுடுதண்ணீரை எடுத்துப் பூனையின் மேல் கொட்டினான். "மியா..... மியா....." என்று நீளமாக அழுது கொண்டே அது ஓடிவிட்டது.

இதைப்பார்த்த காயாவுக்கு கண்ணில் நீர் வந்தது. தன்மீது சுடு தண்ணீர் விழுந்தது போன்று எரிச்சல் உண்டாயிற்று. அதிலிருந்து மஞ்சுவின்மீது காயாவுக்கு இன்னும்அதிகமான ஆசையும் நேசமும் உண்டாயிற்று. கிழவிக்கும் பிரபாவுக்கும் தெரியாமல் நெய்யுடன் கலந்த உணவை கொல்லைக்குக் கொண்டுபோய் மஞ்சுவுக்குப் போடுவாள். தன் பால் தேநீரில் ஒரு பகுதியைக் குடித்துவிட்டு மிகுதியை எப்படியாவது பூனைக்குக் கொடுப்பாள். மத்தியான வேளைகளில் பாட்டி தூங்கும்போதோ, தெய்வதரிசனம் செய்யும் போதோ மஞ்சுவுடன் வீட்டுப்புறத்தில் விளையாடப் போவாள்.

நாளாக நாளாக ரகசியம் அம்பலமா கிவிட்டது. இருவருக்கும் வெட்கம் கெட்டுப்போயிற்று. காயா தேநீர் அருந்தும் பொழுதும், உணவு உட்கொள்ளும் பொழுதும் பகிரங்கமாய் அவளிடம் வந்து மஞ்சு கத்தும். அவள் பரிவுடன் தன்னுடையதை அதற்குப் பகிர்ந்து கொடுப்பாள். இதர வேளைகளில் வெறுமனே காயாவின் மீது அன்புடன் மஞ்சு உராயும்.

பூனையைப் பற்றிக் கிழவியின் உணர்ச்சிகள் ஒருவிதம். எவ்வளவு நேத்திரமாக கிழவி வீட்டுக்காரியங்களைச் செய்தபோதிலும் முடிவில் எதிலாவது ஏமாறாமல் இருக்கமாட்டாள். தவிர தினசரி காலையில் பூனை தரிசனம். "கண்ணாடிக்" குப்பியில் அடைத்து வைத்திருக்கும் அக்கினித் திராவகத்தைப் போல் மஞ்சுவின் மீதுள்ள கோபத்தை அடைத்து வைத்திருந்தாள். அவள் இல்லாவிட்டாள் தங்கப் பூனைகளைச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து தானம் செய்ய அவளிடம் பணம் ஏது? எனவே கிழவியின் ஆத்திரத்திற்கு இலக்கு காயாதான்.

பிரபாவின் உணர்ச்சி மற்றொரு விதம். "எந்த மஞ்சுவினால் நான் அடி வாங்கினேனோ அதை முதல் எப்படி யாவது தொலைத்துவிட வேண்டும்" என்று நினைத்தான் அவன். அதற்குக் குறுக்கே நின்றாள் காயா. தவிர அவனைப் பார்த்ததும் மஞ்சு தாவிப்பாய்ந்து ஓடிப் போய்விடுவதும் காயாவைக்கண்டால் கொஞ்சிக் குலாவுவதும் அவனுக்குப் பிடிக்கவில்லை. "ஒரு பூனைகூட என்னைப் பார்த்து அலட்சியம் செய்யும்படி ஆகிவிட்டதா?" என்ற துயரம். இவ்வளவு எண்ணங்களும் சேர்ந்து "மஞ்சுவையும் காயாவையும் ஏககாலத்தில் கர்வபங்கப் படுத்திவிடு" என்று பிரபாவுக்கு உபதேசம் செய்து கொண்டிருந்தன.

ஒருநாள் காலை வெயிலில் குட்டிச்சுவருக்குப் பின்னால் மஞ்சு கால்களை நீட்டிக் கொண்டு சுகமாய்ப் படுத்துக்கிடந்தது. பிரபா பார்த்தான். ஒரு பெரிய சாக்கை கொண்டு வந்து பூனைமீது போர்த்தி சாக்கையும் பூனையையும் அப்படியே தூக்கிக்கொண்டு வந்தான். கிழவி பார்த்து "அட மஞ்சுவ தொந்தரவு செய்யாத. பிராயச்சித்தம் செய்யப்பணம் இல்லை" என்று கூப்பாடு போட்டாள்.

"ஒன்றும் செய்யவில்லை பயப் படாதே" என்று சொல்லிக்கொண்டே ஒரு கம்பிக்கூட்டில் கொண்டுபோய் அதை அடைத்துவிட்டான். விளையாட்டில் சிங்கம் புலிகளைப் பழக்கவில்லையா? அதற்குப் பிறகு 'இப்படிச்செய்' 'அப்படிச்செய்' என்று ஆட்டிவைத்தபடியெல்லாம் அவை ஆடவில்லையா? அதைப்போல் புலிக்குப் பதிலாகப் பூனையை வைத்து காயாவைக் கண்டால் ஓடிப்போகும்படி பழக்கவேண்டு மென்ற சந்தோசம் போலும் பிரபாவுக்கு. மஞ்சு சிறிது நேரம் கத்திப்பார்த்தது. பிறகு கூண்டிற்குள் குறுக்கும் நெடுக்குமாய் நடந்து. கம்பி இடுக்குகளில் முகத்தை விட்டுப்பார்த்தது. அப்பால் கம்பிகளை முன்கால்களால் பிறாண்டிப்பார்த்தது. ஒன்றும் பலிக்கவில்லை. திரும்பவும் முன்போல் அலையத் தொடங்கிற்று. சிறிது நேரம் சென்று பிரபா பூனைக்கு பால் கொண்டு வைத்தான் என்ன காரணத்தாலோ மஞ்சு பால் சாப்பிட மறுத்தது. கண்களை மூடிக்கொண்டு ஏதோ குருட்டு யோசனை செய்தது.

நடந்தது அவ்வளவும் காயாவுக்குத் தெரியும். இருந்தாலும் அவ்வளவு வெளிப் படையாகப் பிரபாவுடைய விரோதி ஆவதற்கு காயாவுக்குத் துணிவில்லை. இருந்தாலும் மஞ்சுவின் நிலைமைக்காக வருந்தாமால் இருக்கமுடியவில்லை. அன்று காயாவுக்கு சாப்பாடு கூடசரியாக இறங்கவில்லை. இரவு எப்பொழுது வரும் என்று காத்துக்கொண்டிருந்தாள்.

இரவு ஒன்பது மணி இருக்கும்! எங்கே பூனை கூட்டில் செத்துவிடப் போகின்றதோ என்று பயந்து மெதுவாக ஒருவருக்கம் தெரியாமல் கூட்டை அப்படியே வெளியெ எடுத்துக் கொண்டு போய்ப் பூனையை விட்டுவிடுவோம் என்ற எண்ணத்துடன் கிழவி அக்கூண்டின் அருகே வந்து சேர்ந்தாள். அங்கே கொஞ்சம் இருட்டு. அவ்விருட்டில் மற்றோர் உருவம் தோன்றிற்று.

"யாரது?" என்றாள்.

"நான்தான்" என்றாள்

தூங்கிப்போய்விட்டதாக நினைத்தாளே அந்தக்காயா

"இருட்டில் அங்கே என்ன செய்கிறாய்?" என்றாள் கிழவி.

"நீ என்ன செய்யப்போகின்றாய் பாட்டி" என்று பதில் போட்டாள் காயா.

"பயப்படாதே! உன் பூனைக்குட்டியை கோயில் வீதியில் கொண்டுபோய் விட்டு விடுகிறேன். இல்லாவிட்டால் இந்தப் பிரபா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைக் கொன்று விடுவான்..... நீ என்ன செய்கிறாய் இருட்டில்?"

"ஒன்றுமில்லை" என்று காயா சொன்னது பொய். உண்மையில் பின்னேரம் தனக்குக் கிடைத்த தேனீரில் கொஞ்சம் ரகசியமாய் மிச்சம்வைத்து அப்பொழுதுதான் மஞ்சு வுக்குக் கொடுத்து முடித்திருந்தது.

"ஆனால் சரி நீ இங்கேயே இரு நான் கொண்டு போய் விட்டுவிடுகிறேன்" என்றாள் கிழவி. காயாவுக்கு மஞ்சுசை விடவும் சம்மதம் இல்லை. குற்றவாளி யைப்போல் கூண்டில் பார்க்க விரும்பவு மில்லை. முடிவில் எங்கேயாவது பிழைத்துக்கிடக்கட்டும் என்று தைரிய மூட்டிக் கொண்டு "சரி பாட்டி எடுத்துக்கொண்டு போ" என்று தானும் ஆலய முன்றல்வரை போய் விட்டு வந்தாள் "சனியன் தொலைந்தது" என்று கிழவி அகமகிழ்ந்து கொண்டிருந்தாள்.

காயாவுக்கோ துக்கம் நெஞ்சை அடைத்தது. பின் இருவரும் அவரவர் படுக்கைக்குப் போய்விட்டனர். நல்ல நிசிவேளை. பின்னர் ஓர் உருவம் பூனையைப் பார்க்கவந்தது அது வேறுயாருமல்ல பிரபாதான்! இருட்டில் குனிந்து பார்த்தபொழுது கூடுமட்டும் இருந்தது. பூனையைக் காணவில்லை. சொல்லமுடியாத கோபம் சீறியெழுந்தது பிரபாவுக்கு "அந்தக் காயாவை ஒருகை பார்க்கிறேன். ராத்திரி பூனையை விரட்டிவிட்டால் எனக்குத் தெரியாமல் போய் விடுமா? இருக்கட்டும்" என்று சபதம் செய்தான்"

மறுநாள் பொழுது விடிந்தது. கிழவி படுக்கையை விட்டு எழுந்ததும் மஞ்சுவின் முகத்தில் விழித்தாள் "சிவசிவா! போன சனியன் திரும்பி வந்து விட்டதா?" என்று தலையில் அடித்துக் கொண்டாள். ஆனால் காயாவின் மகிழ்ச்சிக்கு அளவில்லை. கொல்லைப் பக்கம் பல்துலக்கப் போனாள் வெந்நீர் அடுப்புக்கூரையின் மேல் பூனைக்குட்டி பதுங்கிக் கோண்டிருந்ததைப் பார்த்தாள் "அட மஞ்சு" என்றாள் காயா

'மியாவ் மியாவ்" என்று கத்திக்கொண்டே அவளருகில் வந்தது பூனை

"என்னைவிட்டுப் போகமாட்டாய்? அப்படித் தானெ மஞ்சு கண்ணு!என்செல்லக் கண்ணு"

"மியாவ் மியாவ்"

"பிரபா கண்டால் உன்னைக் கொன்று விடுவானே! என்ன செய்வது?"

"மியாவ் மியாவ்"

இப்படி காயாவும் மஞ்சுவும் அவரவர் மொழியில் பேசிக்கொண்டிருந்தபொழுதே பிரபா வந்து விட்டான்.

"ஏண்டி காயா! பூனைக்கு செப்படி வித்தை தெரியும் போலிருக்கிறது. கூட்டிலே இருந்துதானே வெளியிலே வந்தது!" என்று கண்ணைச்சிமிட்டினான்.

"போடா குரங்கு உனக்கு என்னடா தெரியும் அதெல்லாம்?" என்று சீறினாள் காயா. மஞ்சு யமனைக் கண்டதுபோல் நடுநடுங்கி எங்கேயோ பதுங்கிவிட்டது. பிரபாவுக்கு அவமானம் தாங்க முடிய வில்லை "நான் காயாவுக்கு அண்ணன் என்று உணரும்படி செய்யா விட்டால் என் பெயரை மாற்றிக் கொள்கின்றேன்" என்று ஓர் அந்தரங்க சங்கற்பம் செய்து கொண்டான். ஆனால் பதற்றமாய் ஒன்றும் செய்யவில்லை. தந்திரத்தைக் கைக் கொண்டான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காயா, உன்மேல் எவ்வளவு ஆசை பார்த்தாயா மஞ்சுவிற்கு! போன பிறப்பிலே அது உனக்குத் தங்கை. அதுதான் அவ்வளவு கொஞ்சுகிறது. அப்போது நான் ஒரு எலி அதுதான் உங்கள் இரண்டு பேருக்கும் என்மேல் கோபம் வருகின்றது. பழையதெல்லாம் போகட்டும் இனிமேல் எல்லோரும் ஒன்றாக இருப்போம். சரிதானா?" என்று அழகாக உருக்கமாகப் பேசினான்.

காயா கோபக்காரிதான். ஆனால் அண்ணனின் பேச்சு அவள் மனதைக் கரைத்தது. அண்ணாவுக்கு இப்போதுதான் அறிவு வந்துவிட்டது என்ற சந்தோஷத் தால் தனது உணவில் அரைவாசியை பிரபாவுக்கு வழங்கினாள்.

மணி எட்டு அடிக்கவே பிரபா காலைப் பள்ளிக்கூடத்திற்குப் போய் விட்டுத் திரும்பினான். இரண்டாந்தரம் சாப்பிட்டான். பிறகு ஓர் அழுக்குக் கடதாசியை எடுத்து எழுதினான்.

அதிபர் அவர்கட்கு!
எனக்கு உடம்பு சரியில்லை. அதிகமான தலைவலியும் காய்ச்சலும் ஏற்பட்டுள்ளது. ஆதலால் இன்று மட்டும் லீவு வழங்கவும்.
க.பிரபா

இக்கடித்தை அடுத்த வீட்டுப் பையனிடம் கொடுத்தனுப்பினான் பிரபா. "வயிற்றுவலி பாடசாலை செல்ல முடியாது" என்று பாட்டியிடம் சொல்லி விட்டு பாயில் படுத்துத்தூங்கினான். பாட்டி பிரபாவுக்கு ஓமமும் வெற்றிலையும் கொடுத்துவிட்டு மூக்குக்கண்ணாடியை மாட்டிக் கொண்டு மெய்மறந்து சிவ புராணம் படிக்க ஆரம்பித்துவிட்டாள். சமயம் வாய்த்ததென்று பாயை விட்டு பிரபா மெதுவாய் நழுவினான். வீட்டின் இரண்டு கட்டில்களிலும் காயாவைக் காணவில்லை. 'திருடர்கள் கொல்லையில் இருப்பார்கள்' என்று எண்ணிக்கொண்டே தடியொன்றைப் பின்னால் ஒழித்து எடுத்துக்கொண்டு கொல்லைப்புறம் போனான்.

காயா ஒரு காலை நீட்டிக் கொண்டு ஆனந்த வெள்ளத்தில் மூழ்கியபடி உட் கார்ந்திருந்தாள். எதிரே அம்மானைக்காய்கள் கிடந்தன. மஞ்சு அவற்றைக் கடித்துக் குதறிக் கொண்டி ருந்தது. பிரபாவுக்கு மஞ்சுவைக் கொல்ல வேண்டுமென்ற எண்ணமல்ல. பாடசா லையில் ஆசிரியர் பிரம்பால் லேசாகத் தலையில் தட்டுகிறாரே அதைப்போல மஞ்சுவுக்கு இரண்டு தட்டுப் போட்டால் அது வழிக்கு வந்தவிடும் என்ற யோசனை. மெதுவாய் காயாவுக்குத் தெரியாமல் அவளுக்குப் பின்புறம் போய் நின்று ஓர் அடி போட்டான். அது இவ்வளவு பலமாய் விழும் என்று அவனே எதிர்பார்க்க வில்லை. காயா அடிப்பதற்கு முந்தி பார்த்துவிடப் போகிறாளே என்ற பயத்தாலேயே அடி அவனை அறியாம லேயே பலமாய் விழுந்து விட்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஞ்சு 'மியாவ்... மியாவ்...' என்று அழுத வண்ணம், ஒடிந்துபோன இடுப்பை இழுத்துக்கொண்டு ஒரு புதருக்குள் மறைந்தது. பிரபாவுக்கு தொண்டையில் சளி அதிகம் கறகறத்த குரலில் "ஏண்டி காயா! நான் விளையாட்டுக்குத்தானே மெதுவாய்த் தட்டினேன்? உன்னைப் போலவே உன் பூனையும் மசக்கு பண்ணுகிறதே!

காயா பதில் சொல்லவில்லை முகம் கடுகுபோல் ஆகிவிட்டது. பூனை அருகே போனாள் தடவிக் கொடுப் பதற்காக. மஞ்சு பழைய மஞ்சுவாகவே இல்லை. நல்ல பாம்பு போல் புதருக்குள் இருந்தபடியே சீறிற்று.

"மஞ்சு.....! மஞ்சு.....! நான் காயாதானே? உனது நண்பிதானே? கோபிக்கிறாயே? கொலைகாரன் பிரபாதானே அடிச்சான்" என்று அழுகையுடன் கெஞ்சினாள். மஞ்சு 'சுர்'...'சுர்''...என்று சீறியதுமல்லாமல் காயாவின் கைகளையும் பிராண்டிவிட்டது. அவ்வளவு துன்பம் போலும் மஞ்சுவுக்கு. காயாவுக்குப் பிராண்டியது கூடப் பெரிதாகத் தெரியவில்லை, தன்னையும் பார்த்து மஞ்சு நடுங்கலாச்சே என்ற துக்கம். துக்கத்தால் அழுகை பலத்தது. தாரைதாரையாகக் கண்களில் நீர் வடிந்தது. காயா அழுவதைப் பார்த்த பிரபாவுக்கு என்றும் அறியாதவாறு கண்ணீர் ததும்பிற்று. அண்ணனும் தங்கையும் ஒருவரைப்பார்த்து ஒருவர் தேம்பித் தேம்பி அழுதார்கள். அழுகை ஓய்ந்ததும் பிரபா போய் மஞ்சுவுக்கு மருந்து கட்ட எடுத்த முயற்சி கை கூடவில்லை. பிறகு இருவரும் கைகோர்த் துக் கொண்டு உள்ளே போய்விட்டார்கள். இரவு வந்தது. கிழவி காயாவைப் பார்த்து "எங்கே உன் மஞ்சு?"என்றாள். காயா தன் கண்களில் வடியும் நீரைத்துடைத்துக் கொண்டு "போ பாட்டி உனக்கு வேறென்ன வேலை இருக்கு" என்றாள்.

அன்றிரவு பத்து மணிக்குமேல் மழை பிடித்துக் கொண்டது. ஒரே பாயில் படுத்துக்கொண்டிருந்த பிரபாவும் காயாவும் மஞ்சுவை நினைத்து மழையைத் திரும்பிப் போகும்படி பிரார்த்தித்துக் கொண்டிருந் தார்கள்.

மறுநாள் அதிகாலையில் குயில் களும் சேவல்களும் பச்சைக் குழந்தை களும் எழுந்திருக்கும் நேரத்தில் இருவரும் எழுந்திருந்து கொல்லைப் புதரில் போய்ப் பார்த்தார்கள் பூனை கண்ணில் படவில்லை. எங்கேயும் போயிருக்குமென்று திருப்திய டைந்தார்கள்.

அந்திப்பொழுது பலமாய் காற்று கிளம்பி விட்டது. மரங்களெல்லாம் பேயாடின. தெருக்களின் தென்னை மட்டையும் உதிர்ந்த இலைகளும் விழுந்தன. இலைச்சருகுகள் சுழன்றன. வாடைக்காற்றுக்கு சமுத்திரமே புரண்டு வருவதுபோல் கருமேகக் கூட்டங்கள் வானில் வந்து நிரம்பின. ஓஹோ! மழைக்காலத் துவக்கம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையிலிருந்து திரும்பி வந்த பிரபாவுக்கு ஒரு குடைச்சல். சந்தேகம். ஒருவேளை தாங்கள் காலை இருட்டில் பூனையைச் சரியாகத் தேடவில்லையோ என்று. அப்படி இருந்து விட்டால் இரண்டாவது நாளும் மஞ்சு மழையில் நனைந்து விடுமே என்று நினைத்து காயாவையும் அழைத்துக் கொண்டு கொல்லைப்புறம் போனான்.

காலையில் பழைய பத்திரி கையோ இலைச்சருகோ என்று அலட்சியம் செய்தது இப்பொழுது மஞ்சு என்று தெரிந்தது. குழந்தைகள் நெஞ்சம் இளகு நீராகிவிட்டது. பரபரப்பாக இருவரும் உள்ளே சென்று ஆளுக்கு ஒருபிடி நெய்யும் சாதமுமாய்க் கொண்டு வந்து மஞ்சுவின்முன் வைத்தார்கள். அது ஆவலின்றிக் கொஞ்சம் தின்றது. அன்றாவது மழையில் நனையாமல் உள்ளே இருக்கட்டும் என்று அவர்கள் மஞ்சுவைப் பிடிக்க முயன்றும் கைகூடவில்லை.

வலி பொறுக்கமாட்டாமல் இருவர் கையிலும் கீறி ரத்தக்காயம் ஏற்படுத்தி விட்டது. காயா கண்கொட்டாமல் பிரபாவைப் பார்த்தாள். அவன் தலை கவிழ்ந்து கால் கட்டை விரலால் மண்ணைத் தோண்டினான். மழை வந்ததும் குழந்தைகள் உள்ளே போய்விட்டார்கள்.

அன்று முதல் எட்டுத்திக்கும் கரைந்து விடும்படியாக மழை பெய்தது. வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. வெளியே யாரும் தலைநீட்ட முடியாது. எப்படியாயினும் மஞ்சுவுக்கு உணவு வைக்க பிரபாவும் காயாவும் மறக்க மாட்டார்கள். மூன்றாவது நாள் மஞ்சு விறைத்துப்போனது பாவம்! இரு குழந்தைகளும் அதைப் பார்த்து விம்மி விம்மி அழுதார்கள். அவர்களுக்குத் தேறுதல் சொன்ன கிழவியின் வார்த்தைகள் அவ்வளவும் தெய்வத்திற்குப்பட்டதோ தெரியவில்லை உண்டியல் கூட நிரம்பவில்லை.

முற்றும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமியப் பாடல்

**கலாபூஷணம் க.தணிகாசலம்**



தாளம்:- தன்னானேத் தானே நன்னேத்
தனதானே தானே நன்னே
தன்னானேத் தானே நன்னே
தனதானே தானே நன்னே

ஆண்:- கொள்ளிகட்டப் போற மச்சி
கூட வாறேன் நில்லு மச்சி
வள்ளிமாமி பெத்த பொண்ணு
வடிவான தேவரசி
போறாளே பொண்ணு கொள்ளி கட்டப்
போறாளே பொண்ணு

பெண்:- காலநேரம் தெரியல்லையா
கறுத்தக் கண்ணா கிளிமூக்கா
மாலை நேரச் சூரியனும்
மறையமுன்னே திரும்பிடணும்
வாறானே மச்சான் துணைக்கு
வாறானே மச்சான்

ஆண்:- நாட்டுச் சேலை கட்டிக்கிட்டு
நளினமான றவுக்கை போட்டு
காட்டு வழி போற மச்சி
துணைக்கு வாறேன் நில்லு மச்சி
போறாளே பொண்ணு கொள்ளி கட்டப்
போறாளே பொண்ணு

பெண்:- பொண்டுகள முன்னே பாரு
கண்டுக்காமப் போறாளுகள்
நிண்டு கதைச்ச மெண்டா
நில வரமோ பெரிசு மச்சான்
வாறானே மச்சான் துணைக்கு
வாறானே மச்சான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்:- காகம் கரையுதடி
கருங்குயிலும் கூவுதடி
காதல் பெருகுதடி
கலையரசி மௌனமேண்டி
போறாளே பொண்ணு கொள்ளி கட்டப்
போறாளே பொண்ணு

பெண்:- எண்ணி எண்ணிப் பார்க்கையிலே
கன்னிமனம் நாணுதையா
காட்டுக்குள்ள மறைஞ்சு நில்லு
கட்டிமுத்தம் நான் தாறேன்
வாறானே மச்சான் துணைக்கு
வாறானே மச்சான்

ஆண்:- கிராமத்துப் பூ மணமே
கிளிமொழியே தாரகையே
மாமரத்து மாங்குயிலே
மறையுறேண்டி காட்டுப் பக்கம்
போறாளே பொண்ணு கொள்ளி கட்டப்
போறாளே பொண்ணு



பெண்:- செம்பவள நெற்கதிர்கள்
சோடி சேரும் காட்சியைப் பார்
அந்தியில நாம்பனெல்லாம்
பசுக்களோடு இணையுது பார்
வாறானே மச்சான் துணைக்கு
வாறானே மச்சான்

ஆண்:- பாக்கப் பாக்க உன்னையுந்தான்
தூக்கி வாரிப் போடுதடி
பலாச்சோலைப் பழரசமே
பகலவனக் காணல்லடி
போறாளே பொண்ணு கொள்ளி கட்டப்
போறாளே பொண்ணு

பெண்:- பக்கத்துல நிக்கேன் மச்சான்
பழரசத்தை அருந்து மச்சான்
வெட்கத்துக்கிடமேயில்லை
வேணுமட்டும் விளையாடு
வாறானே மச்சான் துணைக்கு
வாறானே மச்சான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையில் கலைவளர்ச்சி

## ( அனுபவப் பகிர்வு )

பாடசாலைகளில் நடைமுறையில் உள்ள கலைத் திட்டத்துடன் இணைக் கலைத்திட்டம் அல்லது இணைப் பாட விதான செயற்பாடுகள் எனும் அடிப் படையில் கலை இலக்கியத்தின் வளர்ச்சிக்கு வாய்ப்பாக அமைந்துள்ளது. அந்த வகையில் மாணவர் மன்றம், தமிழ் மொழித்தினம், சிறுவர் அரங்கு முதலான நிகழ்வுகளினூடாக மாணவர்களின் பங்குபற்றல்களினால் கலை இலக்கியப் பயிற்சியும் தேர்ச்சியும் பெற்று சாதனை களைப் படைக்க முடியும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டிருப்பு கல்வி வலயத்தில் பின்தங்கியது எனக்கருதப்படும் போரதீவுப்பற்றுக் கோட்டத்தில் உள்ள கஸ்டப் பிரதேசப் பாடசாலையான மட்/பட்/பழுகாமம் கண்டுமணி மகா வித்தியாலயத்தின் அதிபர் எனும் வகையில் இவ்விடயம் சார்ந்த அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

பாடசாலை மட்டத்தில் மாணவர் மன்றங்கள் நடாத்தப்படுவதூடாக கவிதை, பேச்சு, பாடல், நடனம், நாடகம், விவாதம், வில்லுப்பாட்டு, நாட்டுக் கூத்து எனும் கலை இலக்கிய வடிவங்களில் பயிற்சி பெற்று தமிழ் மொழித்தினப் போட்டிகளில் வலய மாவட்ட, மாகாண மட்டங்கள் வரை செல்லக்கூடிய சாதனையாளர்களாக மாண வர்களை உருவாக்க முடியும். அவ்வ கையில் கடந்த 2015ம் வருட எமது பாடசாலை மாணவர்கள் கர்ணன் போர் எனும் நாட்டு கூத்தில் மாவட்ட மட்டத்தில் இரண்டாம் நிலை பெற்றமை யைக் குறிப்பிடலாம்.

இத்தகைய நிகழ்வுகளில் பங்கு பற்றும் மாணவர்கள் பலரது பாராட்டையும் வாழ்த்துக்களையும் பெறுவதன் மூலம் கற்றலிலுள்ள ஊக்கமும் அதிகரிக்கும். அவ்வகையில் பிரதமரின் 40 ஆவது வருட அரசியல் சேவை பூர்த்தியை முன்னிட்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் அம்பேவல பாற்பண்ணையின் புதிய நவீன இயந்திரம் பொருத்தப்பட்ட தொழிற் சாலையின் திறப்பு விழாவில் எமது பாடசாலை மாணவர்கள் நிகழ்த்திய உழவர் நடனம் பாராட்டைப் பெற்றது. இதனை பார்வையிட்ட பிரதமர் கைதட்டி பாராட்டியதுடன் தனது உரையிலும் பாராட்டுக்களைத் தெரிவித்தமை குறிப்பிடத் தக்கது.

கடந்த 31.08.2017ல் கரடியனாறு விவசாய பயிற்சி பாடசாலை திறப்பு விழாவில் எமது பாடசாலை மாணவர்களின் உழவர் நடனம் சிறப்பாக மேடையேற்றப் பட்டது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் எமது மாணவர்களைப் பாராட்டியமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

2016 இல் நடைபெற்ற தமிழ்த் தினப் போட்டியில் பிரிவு II இல் தனியிசைப் போட்டியில் எமது பாடசாலையைச் சேர்ந்த செல்வி தங்கேஸ்வரன் டிலானி எனும் மாணவி மாவட்டமட்டத்தில் முதல் நிலை பெற்றமையும் அதே போன்று 2017 இல் நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டியில் சிரேஷ்ட நிலையில் கு.கோகுலவாணி கட்டுரைப் போட்டியில் முதல் நிலை பெற்ற மையும் குறிப்பிடத்தக்க விடயம் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலயமட்டத்தில் நடைபெறும் சிறுவர் அரங்கில் கடந்த 2010,2011 களில் மூன்றாம் நிலையினையும் 2012இல் இரண்டாம் நிலையினையும் 2013, 2014களில் முதல் நிலையையினையும் எமது பாடசாலை பெற்றுக் கொண்டமையும் சொல்லப்பட வேண்டிய விடயம் ஆகும்.

போரதீவுப்பற்று கலாசார விழாவில் கலாசாரப் பேரவை நடாத்திய கும்மி கோலாட்டம் போட்டிகளில் முதல்நிலை பெற்ற கும்மி கோலாட்டம் என்பன சிறப்பாக மேடையேற்றப் படவுள்ளன. இது மாத்திர மன்றி திருப்பழுகாமம் பாஞ்சாலி கலைக் கழகம் வருடந்தோறும் ஸ்ரீ திரௌபதை அம்மனின் தீமிதிப்பினை சிறப்பிக்கும் வகையில் நடாத்தும் கலையரங்கில் எமது பாடசாலை மாணவர்களும் இணைந்து கும்மி, கோலாட்டம், வில்லிசை, நாடகம் முதலாக கலை வடிவங்களைப் படைத்து வருகின்றனர்.

இத்தகைய கலை இலக்கியப் பயிற்சிகளை பாடசாலைகளில் பெறுவதன் மூலம் மாணவர்களின் உடல், உளம் நலம் பெறுவதும் கற்றலைத் தூண்டும் சாதனைகள் படைக்கவும் வாய்ப்பாக அமைவதனால் எமது பிரதேசத்திலுள்ள அனைத்துப் பாடசாலைகளும் இத்தகைய கலை இலக்கிய முயற்சிகளை துரிதமாக முன்னெடுப்பது அவசியம் ஆகும்.

**திரு. சு. உதயகுமார்**
அதிபர்- மட்/பட்/பழுகாமம் கண்டுமணி ம.வி.

**போரதீவுப் பற்றுப் பிரதேச கலாசார விழா சிறப்புற வாழ்த்துகின்றோம் ....!**

உங்களுக்குத் தேவையான அனைத்துவிதமான கட்டடப் பொருட்களையும் உத்தரவாதத்துடன் மிகக் குறைந்த விலையில் கொள்வனவுசெய்ய

**தசாணி**

**Hardware & Electricals**

பிரதான வீதி, கோவில்போரதீவு
தொ.பே.: 077 1605926



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த தேசத்தை கட்டியெழுப்பும் இலக்கியம் மற்றும் கலை

தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தி நிலைபேறான சமாதானத்தையும் ஏற்படுத்தி அமைதியான ஒழுக்கமான முழுமையான மனிதர்களைக் கொண்ட தேசத்தை கட்டியெழுப்புவது இலக்கியம் என்னும் பேரானந்தமான ஒளியும் கலை எனும் துணையொளியுமே ஆகும். அதாவது ஒரு கூட்டாக வசிக்கும் சமூகம் எனும் பெருங்கோட்டையில் தவிர்க்க முடியாத தேவைகளை ஒட்டி இலக்கியங்களும் மற்றும் கலைகளும் தோற்றம் பெற்றன.

இலக்கியம் என்பது மக்களின் தேவை, விருப்பம், ஆர்வம் என்பன ஏதோ ஒரு வகையில் புதிய புதிய விடயங்கள் மொழியிலாக தோன்றி பல இலக்கிய வடிவங்களை தோற்றுவித்தன. அம்சமாய் அழகாய் வடிவமைக்கப்பட்டதாக கலைகள் பல தோற்றம் கண்டன. இலக்கியங் களை குழந்தை இலக்கியம் புலம் பெயர் இலக்கியம், ஈழத்து இலக்கியம் எனப் பல வகையாக பாகுபடுத்த முடியும். அவ்வாறே கலைகளை இசைக்கலை, ஆடற்கலை, சிற்பக்கலை, சித்திரக்கலை, கட்டடக்கலை, கவிதைக்கலை, நாடகக்கலைகள் எனப் பிரித்துள்ளனர்.



மனிதனுடைய நல்வாழ்விற்குத் துணை செய்யும் பல வகையான தொழில் களையும் நாம் கலைகள் என்று கூறுகின் றோம். இவ்வாறாக இலக்கியம் மற்றும் கலைகள் மனிதனின் உள்ளத்தில் உணர்ச் சியை எழுப்பி இன்பத்தையும், மனநிறை வையும், கற்பனை வளத்தையும் ஊட்டி பூரணமான மனிதனாக ஒவ்வொரு வரையும் மாற்றி உலகத்தை மாற்று கின்றது. இவ்வாறான இலக்கியம் மற்றும் கலை என்பவற்றினால் பல முறைகளி னால் மனிதர்களால் போதிக்கப்பட்ட இவ் உலகத்தையே மாற்றி விட முடியும் என்பதில் எந்த விதமான ஐயமோ கேள்வியோ இல்லை. இவ்வகையான கலை, இலக்கியம் என்பன சங்ககாலம், சங்க மருவியகாலம், பல்லவர்காலம், சோழர்காலம், நாயக்கர் காலம் என தமிழ்நாடு முதல் ஆதிகாலம் தொட்டு இன்றைய நவீன காலம் வரை மரபு வழியாக பல படைப்புக்களை செய்தும், நிகழ்த்தியும் வந்துள்ளன.

அதாவது இவ்வகையான இலக்கியம் மற்றும் கலைகள் ஈழத்தில் பல வகையான செல்வாக்கினை ஏற்படுத்தி யுள்ளது. இதனை நோக்குவது அவசிய மானதாகும். அதாவது சாதி, மதம், இனம், பேதம் எனும் பாகுபாட்டிற்கும், அடக்கு முறைக்கு எதிராகவும் பல்வேறுபட்ட படைப்புக்கள் வெளிவர வாய்ப்பளித்தது என்பது மிகையாகாது. அத்தோடு இன விடுதலைப் போராட்டம், விடுதலை இயக்கங்களின் செயற்பாடு தொடர்பான மாற்றுக் கருத்துக்கள் மற்றும் விமர் சனங்கள், எழுத்துக்கள், சித்திரங்கள் என்பன வெளிவர இடமளித்தது, அத்தோடு ஈழத்து சூழலிலே நிலவும் அதாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது மட்டும் நடந்துவரும் பிரச்சினைகளான சீதனப்பிரச்சினை, சாதிப்பிரச்சினை, வேலைப்பிரச்சினை பெண்களின் அடக்குமுறை என்பவற்றை வெளிப்படுத்தும் சமூகம் தொடர்பான நாவல்கள் தோற்றம் பெற்றன. இதனை
"ஆண்கள் விற்பனைக்கல்ல"
"வித்தியாசப்படும் வித்தியாசங்கள்"
"பெண்கள் ஆளப் பிறந்தவர்கள்" என ஈழத்து இலக்கியங்கள் பல சிறப்பாக தோற்றம் பெற்று சிறந்ததொரு மனிதர்களை கொண்ட தேசத்தை கட்டியெழுப்புகின்றன.

அத்தோடு இலக்கியம் மற்றும் கலைகளிலே முக்கியமாக கவிதை எனும் இலக்கியமாகிய கலைவடிவத்திலே அகதி வாழ்க்கையின் அனுபவம், புதியதொழில், அன்னியப்படுத்தப் படும் தன்மை, நிற பேதம், ஒழுக்கப்பிறள்வு, பண்பாட்டு முரண்பாடுகள், காலநிலை சீர்கேடுகள் எனப்பலவகையான இன்னல்களுக்கு அவர்கள் முகம் கொடுத்த அதாவது எதிர் நோக்கிய தன்மையினையும் மேலும் சுற்றித்திரிந்து தாயகம் பற்றி ஏக்கம் எதிர்காலம் பற்றிய நோக்கம், தமது வாழ்வு அடையாளம் பற்றிய சிந்தனை, சொந்த மண்ணிலே கழித்த இளமை, சொந்த மண்ணைப் பிரிந்த ஏக்கம் என தற்போது சமூகத்தில் நடக்கும் சம்பவங்களை பிரதிபலிப்பனவாய் உள்ளன இதனை பெரும் நன்மையாகவே கருத முடியும் என்பதில் எந்த விதமான மறுப்பும் இல்லை.

உதாரணமாக :

**"யாழ்நகரில் என் பையன்**
**கொழும்பில் என் பெண்டாட்டி**
**வன்னியில் என் தந்தை**
**தள்ளாத வயதில் தமிழ்நாட்டில் என் அம்மா**
**சுற்றம் பிரான்ஸ் கோட்டில்**
**ஒரு சகோதரியோ பிரான்ஸ் நாட்டில்**
**நானோ வழி தவறி அலாஸ்கா வந்து விட்ட**
**ஒட்டகம் போல் ஒஸ்லோவில்" என**

இவ்வாறு இலக்கியம் மற்றும் கலைகள் அனைத்திலும் ஏக்கமும் பிரிவுத் துயரும் அமைந்திருப்பதனைக் காணலாம். இவ்வாறாக ஏக்கம் மற்றும் பிரிவுத் துயரை மக்களுக்கும் சமூகத்திற்கும் எடுத்துக்காட்டி அவர்களை சிந்திக்க வைத்து முழுமையான சிறந்த மனிதர்களை உருவாக்குகின்றது. இவ்வாறான இலக்கியங்களில் புதிய மொழியாட்சி படிவம், குறியீடு, உவமை போன்ற அணி கலன்களைக் கொண்டே பிரதான கருத்தை வெளிப்படுத்தும்.

அத்தோடு 1987 இல் தோற்றம் பெற்ற இனக்கலவரம் அதாவது பேரினவாத்தின் அடக்கு முறையினால் பாரம்பரிய தமிழ்ப் பிரதேசங்களுக்கு தமிழர்கள் விரட்டியடிக்கப்பட்னர். இதனால் ஐரோப்பிய நாடுகளில் மக்கள் புலம் பெயர்ந்து வாழ்ந்தனர். மேலும் 1983இல் ஏற்பட்ட இனம் சார்ந்த கலவரம், இனக்கொலை என்பன விடுதலை இயக்கம் சார்ந்த தமிழ் இயக்கங்கள் தரமாக வேட்டையாடப் பட்டது. இவ்வாறாக கிடைக்கக்கூடிய வழிமுறைகள் யாவற்றையும் பயன்படுத்தி உலகில் எங்கெல்லாம் செல்ல முடியுமோ அங்கெல்லாம் சென்றார்கள் அங்கு சென்றவர்கள் இந்நாட்டில் அடைந்த இன்னல்கள் அடக்கு முறைகளையும் தாம் புலம் பெயர்ந்த நாட்டிலே படுகின்ற துன்பங்களையும் சிறுகதை, நாவல், கவிதை, நாடகம் போன்ற இலக்கியங்களிலும் சிற்பம், சித்திரம் போன்ற கலைகளாலும் வெளிப்படுத்தி சிறந்த மனிதர்களை உருவாக்க துணைபுரிந்தது எனலாம். இவ்வாறாக இவ் வகையான நற்கருமங்களை செய்வதற்கு பத்திரிகை , சஞ்சிகைகளான உலக தமிழர், மஞ்சரி, தாயகம், சக்தி, ஈழகேசரி, ஈழநாடு, லண்டன் முரசு, தூண்டில், ஓசை, மனிதன், சுவடுகள், பாலம் நாலாவது பரிமாணம், மரபு, அஆஈ, அக்கினிக் குஞ்சு போன்ற பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் துணைபுரிந்தது எனலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக சமூகத்தில் தவிர்க்க முடியாத தேவைகளை ஒட்டி இலக்கியங்கள் தோன்றியுள்ளன. மக்களின் தேவை, விருப்பம், ஆர்வம் என்பன ஏதோ ஒரு வகையில் புதிய புதிய இலக்கிய வடிவங் களை தோற்றுவிக்கின்றன. இந்தவகையில் தொன்று தொட்டு வழங்கி வரும் இலக்கி யங்கள் தேசத்தை கட்டியெழுப்ப அவசிய மானதொன்றாகும். இவ்வகையான இலக்கியங்கள் அனைத்தும் தமிழில் எப்போது எவ்வாறு தோன்றியது என்று அறுதியிட்டுக் கூறமுடியாது. ஆனால் இவ் இலக்கியங்கள் ஆதி தொடக்கம் முதலே காணப்பட்டுள்ளது என்பதற்கு

"குழவி மருங்கினும் கிளவதாக"

எனும் தொடர் எடுத்துக் காட்டாக விளங்குகின்றது. அத்தோடு மேலும் சில சினிமாக்கள், வானொலி நிகழ்ச்சிகள், சித்திரங்கள் என்பவற்றில் இலக்கிய வகையில் முதலில் நோக்கப்பட வேண் டியது வாய்மொழி இலக்கியமே ஆகும். அத்தோடு இவ் இலக்கியங்கள் மற்றும் சிறுவர்கள் குழந்தைகளுக்கு கூட பயனை விளைவிக்கின்றன.

குழந்தை மனம் இசையால் மிக இலகுவாக ஈர்க்கப்படும் தன்மையுடையது. இவ்வாறாக ஒரு தாயை இழந்த குழந்தையை அமைதிப்படுத்தி தூங்கச் செய்வதற்கு தாலாட்டு எனும் இலக்கியம் உதவியாய் அமைகின்றது. அதாவது தாய்ப்பால் ஊட்டாமலே தாலாட்டு மூலம் அமைதிப்படுத்தலாம் என்பதை இலக்கியம் புரியவைக்கின்றது. இதற்குச் சான்றாக பின்வருவதைக் காணலாம்.

"அம்புலி மாமா வா வா
அழகு சொக்கா வா வா" எனவும்
"கைவீசு அம்மா கைவீசு
கடைக்குப் போகல்லாம் கைவீசு"

எனும் தாலாட்டுப் பாடலை இலக்கிய வடிவத்தில் இருந்து தோன்றி இருப்பது குறிப்பிடத்தக்கது.

அத்தோடு தமிழ்மொழி பாரம் பரியத்தின் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, வெற்றிவேட்கை போன்ற நீதி நூல்களை ஆரம்பத்தில் சிறுவர்களுக்காக கற்பிக்கப்பட்டது. அதாவது சிறுவர்க்கு விளங்காத போதும் இலக்கியத்தின் புறத்தோற்றம் மூலம் சிறுவர் இலக்கியம் என அறிந்து பயமின்றி படைத்தனர்.

தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்கத்தின் மூலமும் நிலை பேறான சமாதானத்தை ஏற்படுத்த முடியும். அந்த வகையில் தேசிய ஒருங்கிணைப்பு, நல்லிணக் கம் என்பன ஒரு நாட்டின் நிலையான சமாதானத்தை உருவாக்க முக்கிய காரணிகளாக அமைகின்றன. இதனை ஒரு நாட்டின் இரு கண்கள் எனவும் குறிப்பிடலாம். அத்தோடு இன, மத, மொழி, கலாசார, பண்பாட்டு வேறுபாடின்றி மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற் படுவதனை தேசிய ஒருங்கிணைப்பு எனக் குறிப்பிடலாம். இதற்கு அனைத்து மக்களிடையேயும் நல்லிணக்கம் நிலவ வேண்டும். இவ்வாறு நல்லதொரு நல்லிணக்கமான தேசத்தை கட்டியெழுப்பு வதற்கு இரு தீப்பொறிகளான இலக்கியமும் கலையுமே அவசியமானவை ஆகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தோடு தொழினுட்பத்திலும், பொருளாதாரத்திலும், கல்வியிலும், ஒழுக்கத்திலும் அதாவது பல்வேறு பற்பல துறைகளிலும் முதன்மையானதாக விளங்குவதற்கு அந்நாட்டின் சமாதானம் என்பது முக்கியமானதாகும். இத்தகைய அடைவு மட்டத்தை இலக்கியம் மற்றும் கலை என்பவற்றை அபிவிருத்தி செய்து அதனூடாக விளக்கி நல்லதொரு தேசத்தை நிச்சயமாக கட்டியெழுப்ப முடியும். அத்தோடு பேச்சுத்தமிழ் கலந்ததாகவும் இலக்கியங்கள் படைக்கப்பட்டுள்ளன. அதாவது இலக்கணத்தில் வீரசோழியத்தின் அதாவது இது போன்ற நூல்களின் முதல் முக்கியமான தன்மை மற்றும் அறிஞர் வீரமாமுனிவரின் படைப்பாற்றல் மற்றும் இழிசனர் வழக்கு என்ற நிலைமாற்றம் அடைவதற்கு இலக்கியமே முக்கிய காரணியாகும்.

அத்தோடு புனைகதைகளில் அங்கீகாரத்தைப் பெற்ற இலக்கியங்கள் ஒவ்வொரு பிரதேசங்களின் பெருமைகளை அம் மண் வாசனையுடன் பிராந்தியமாக வெளிப்படுத்துவது உயிர்ப்பான இலக்கியங்களே ஆகும். இவ்வாறாக நாம் வாழும் காலத்தில் கரையில்லாத இலக்கியம், கலை ஆகிய இரண்டு திறமையுடன் போராடினால் சிறந்த தேசத்தை கட்டியெழுப்ப முடியும். இவ்வாறான இலக்கியத்தில் உள்ள விடயங்களை வாசகர்கள் நன்கு விளங்கிக் கொள்ளும் வகையில் இலக்கிமானது கற்பனை, வர்ணனை, பண், எதுகை, மோனை என்பவற்றைக் கொண்டு நயம் அதாவது வாசகர்கள் நயம்பட பார்ப்பதற்கு சிறப்பான முறையில் அமைத்திருக்கும். இவற்றுடன் இழிவரல், நகை, வீரம், சோகம், வெகுளி, மகிழ்ச்சி, சிருங்காரம், அவலம், அச்சம் என்னும் ரசங்களையும் இலக்கியங்களில் காணலாம்.

அத்தோடு அரசியல், சமூக, பொருளாதார பண்பாட்டு அம்சங்களில் பெரிதும் வேறுபட்ட நாடுகளான லண்டன், அவுஸ்ரேலியா, ரஷ்யா போன்ற நாடுகளுக்கு சென்று வாழ்பவர்களால் இலக்கியங்கள் படைக்கப்பட்டன. வரலாற்று அடிப்படையில் ஈழத்தமிழர்களால் படைக்கப்பட்டதே இலக்கியம் ஆகும். இவ்வாறான இலக்கியங்கள் தாயக நினைவும், போர்ச்சூழலும் புதிய சூழலில் புதிய அடையாளங்கள், புலம்பெயர் வாழ்வின் அவலங்களும் முரண்பாடுகளும், அரசியல் விமர்சனம், பெண்களின் விழிப் புணர்வு, மொழிபெயர்ப்பு முயற்சி போன்ற






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்புகளைக் கொண்டு காணப் படுவத னாலே அமைதியான, ஒழுக்கமான முழு மையான மனிதர்களைக் கொண்ட தேசத்தை கட்டியெழுப்பும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

ஒரே அரசியல், பூகோள எல்லையை விட்டுப் பெயர்ந்து சமூக அரசியல் பண்பாட்டுச் சூழ்நிலைகளில் பெரிதும் வேறுபட்ட பிரதேசங்களில் வாழ்பவர்களால் எழுப்படும் இலக்கியம் மிகச் சிறப்பானது. இப்புகலிட இலக்கியங்கள் கவிதை, சிறுகதை, நாவல் எனப் பல வகைப்படும். உரையினாலேனுஞ் செய்யுளினாலேனும் இயற்றப்படும் நூல்கள் எல்லாம் பொதுவாக இலக்கியத்தின் பாற்படும். எனினும் வாழ்க் கையின்கண் வரும் அனுபவங்களை அழகுறப் புனைந்து கூறும் நூல்களே சிறப்பாக இலக்கியம் எனக் கருதலாம்.

அத்தோடு 1935இல் கே.எஸ். அருள்நந்தி அவர்களால் தொகுக்கப்பட்ட பிள்ளைப் பாடலைத் தொடர்ந்து இலக்கியம் வளர்ச்சியடைய இத்தொகுப்பு வெளிவந்து 35 ஆண்டுகளுக்கு பின்னர் 1970 இல் "முத்துக்குவியல்" எனும் கவிதைத் தொகுப்பு இலக்கிய முயற்சியாக தமிழ் நாட்டில் வெளிவந்தது. இதன் மூலமாக இலக்கியம் பற்றிய சிந்தனை ஈழத்தவ ரிடையே மேலோங்கி நின்றது எனலாம்.

அத்தோடு கவிஞர் கே.எஸ். அருள்நந்தி அவர்களது முயற்சியால் பல நல்ல கவிஞர்கள் அதாவது இலக்கிய வாதிகள் ஈழத்தில் உருவானார்கள். இவ்வகையில் நவாலியூர் சோமசுந்தரப் புலவர், கீதாஞ்சரம், பஞ்சாட்சரசர்மா, ஜே.ஆழ்வார்பிள்ளை, க.சின்னத்தம்பி முதலியோர் குறிப்பிடத்தக்கோர். இவ் வாறாக பல இலக்கியங்களை அமைத்து இவர்கள் சிறந்த மனிதர்களைக் கொண்ட தேசத்தை கட்டியெழுப்பினார்கள்.

எனவே மேற்கூறியவற்றைத் தொகுத்து நோக்குகின்ற போது இலக்கியம் மற்றும், கலைகளின் தோற்றம் பார் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறு பொருள் பரப்பு விரிவடைந்து இலக்கி யங்கள் மற்றும் கலைகள் வளர புதிய உத்திகள் பலவகையாக பல் வேறு பட்ட முறையில் கையாளப் பட்டுள்ளன.

அத்தோடு இலக்கிய பரப்பிலே புலம்பெயர் இலக்கியம் என்ற புதுவகையான இலக்கிய வகையினை தோற்றுவித்து தமிழ் இலக்கிய வளர்ச்சிக் கும் அமைதியான, ஒழுக்கமான, முழுமை யான சிறந்த மனிதர்களைக் கொண்ட தேசத்தை கட்டியெழுப்பும் என்பதை எவராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாத ஓர் உண்மையாகும்.

**செல்வி இ. வினித்தா**
மட்/பட்/வெல்லாவெளி க.ம.ம.வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்கால ஏர்ப்பாடல்

ஓடி நட கண்டே செல்லா உன்
உறுதியுள்ள காலாலே
பாடி வரும் தும்பிகளை
பலியாக்கி நீ வருவாய்

சார் பார்த்து வாடா செல்லா
சனம் பார்த்து நீவாடா
ஊர் பார்த்து வாடா நீ
ஊண் உறக்கம் பாராது

தும்பி வரும் தோணி வரும்
நம்பி நட செல்லா நீ
நாளை விடிவு வரும்

ஓர் முகத்தில் கயிறு கட்டி
உன் கழுத்தில் மாலையிட்டு
போர் குவிய உழுது வரும்
பொட்டகமே நீ நடவாய்

ஓடி நட னண்டே செல்லா உன்
உறுதியுள்ள காலாலே தேடிவரும்
சார் பார்த்து கூடி
தேரிழுக்க நீ வாடா

முழங்கால் வலிக்குதடா உந்தன்
முதுகெலும்பு கூனுதடா
கலங்காதே செல்லா நீ
கடும் சுமைகள் களம் பொலியும்

ஏரிழுத்து ஓடி நட
எதிர் கொள்ளும் வில்லங்கம்
வேரறுத்து வீறு நடை
விரைந்து நட செல்லா நீ

தூக்கம் உனக்கில்லை செல்லா
துன்ப துயர் எதுவுமில்லை
பார்க்கும் உன் விழிகளிலே
பயமில்லை நட கெதியா

தங்க வயல் காக்கும்
தண் மதியே செல்லா நீ
பொங்கு தமிழ் விழுமியங்கள்
போகவிட்டுப் போனாயோ

காக்கையினம் கூடு கட்டி
கருங்குயில்கள் முட்டையிட
பார்க்கிறதா செல்லா
பதம்பார்க்க நீ வாடா

அணில் பிள்ளை திரவு வெட்ட
மண் உண்ணி பேரேடுக்க
பொறுப்பதோ செல்லா நீ
பொங்கியெழ மாட்டாயோ

டிப்பர் நெல் ஏத்துதடா எங்கும்
டீசல் மணக்குதடா
உப்பு வயல் ஆக முன்னம் செல்லா
உறுமி எழுந்து வாடா
உழுதுண்டு வாழ்பவர்க்கே
உலகமெல்லாம் சொந்தமென
எழுது நாள் இன்றெனவே செல்லா
எழுந்து சரமாட்டாயோ............

கவியாக்கம்
**தணிகா சேரன்**
திருப்பழுகாமம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிப்பாடல்

இயந்திர சாதனங்கள் வருவதற்கு முன்னர் நமது முன்னோர்கள் தமது விவசாய நடவடிக்கைகளுக்காக எருது மாடுகளைக் கொண்டு உல்லுக்கலப்பை, புரட்டுக் கலப்பை இவைகளினால் நிலத்தை உழுது பண்படுத்தி நெல்வேளாண்மை செய்து அந்நெல்மணிகளை வைக்கோலில் இருந்து பிரித்தெடுப்பதை சூடு மிதித்தல் அல்லது சூடடித்தல் என்று சொல்வார்கள். இச் சூடடித்தல் அல்லது சூடுமிதித்தலுக்கு 06 எருமை கடா மாடுகளைக் கொண்டு இரவு வேளைகளில் இந் நிகழ்வு நடைபெறும்.

மாடுகளால் சூடுமிதிக்கும் போது அக்காலத்தில் வெளிச்ச வசதியும் குறைவாக இருந்த காலம் மக்கள் தொகை குறைவு, காட்டு மிருகங்களின் நடமாட்டம் அதிகம், பேய் பிசாசுகளின் நடமாட்டம் அதிகம், இரவு வேளைகளில் தனிமை இப்படியாக இருக்கும் போது இறைவனையும் தமது குல தெய்வங்க ளையும் வேண்டி, கலை உணர்வோடு, கால் நடைகளுக்கும் தொந்தரவு கொடுக்காமல் தனது இனிமையான குரலில் பாடிக் கொண்டே சூடு மிதிப்பார்கள். அப்பாடல் வரிகள் இங்கே தரப்படுகின்றது.

திருச் சிற்றம்பலம்

***பொலி பொலி தாயே பொலி தம்பிரானே பொலி***
***பூமி பொலி பூமாதேவித் தாயே பொலி மண்ணின் களமே***
***மாதாவே தாயே நிறைகளமே வளர் பூமி***
***பொன்னின் களமே பொலி பொலி பொலியோ......***

***கணபதியே கரிமுகனே பொலியம்மா தாயே பொலி***
***கந்தருக்கு மூத்தவரே பொலி பொலி பொலியோ...***
***பேளை வயிற்றோனே பொலியம்மா தாயே***
***பெருச்சாளி வாகனரே பொலி பொலி பொலியோ....***

***பரமசிவனாரே பொலியம்மா தாயே பொலி***
***பார்வதியாள் புத்திரரே பொலி பொலி பொலியோ...***
***கந்தன் தேர் ஓடப் பொலியம்மா தாயே பொலி***
***கணபதி தேர் முன்னடக்கப் பொலி பொலி பொலியோ..***

***வேலன் தேர்ஓடப் பொலியம்மா தாயே***
***விநாயகர் தேர் முன்னடக்கப் பொலி பொலி பொலியோ...***
***முன்னடக்கும் பிள்ளையார்க்கு பொலியம்மா தாயே பொலி***
***கண்ணடக்கம் பொன்னாலே பொலி பொலி பொலியோ...***

***கண்ணடக்கம் பொன்னாலே பொலியம்மா தாயே பொலி***
***காற்சிலம்பு முத்தாலே பொலி பொலி பொலியோ.....***
***ஆலையடிப் பிள்ளையாரே பொலியம்மா தாயே பொலி***
***அரசையடி ஐங்கரனே பொலி பொலி பொலியோ...***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர் ஏறப் பொலிவளர பொலியம்மா தாயே பொலி
பூமியிலுள்ளோர் ஈடேறப் பொலி பொலி பொலியோ....
மாதா மணம் மகிழ்ந்து பொலியம்மா தாயே
மகிழ்ந்து பொலி தாருமம்மா பொலி பொலி பொலியோ..

கண்டுப் பனை ஓலை பொலி அம்மா தாயே பொலி
கந்தர் கணக்கெழுத நல்ஓலை பொலி பொலி பொலியோ...
பெரிய பனை ஓலை பொலி அம்மா தாயே பொலி
பிள்ளையார்க்கு பெயர் எழுத நல்லோலை பொலி பொலி பொலியோ...

சின்னப்பனை ஓலை பொலியம்மா தாயே பொலி
சிவனார்க்குச் சீட்டெழுத நல்லோலை பொலி பொலி பொலியோ...
வாட்டி வலமாகப் பொலியம்மா தாயே பொலி
வலம்புரிகள் சங்காகப் பொலி பொலி பொலியோ...
சங்கு முழங்குதங்கே பொலியம்மா தாயே பொலி
சிவ சங்கரனார் கோவிலிலே பொலி பொலி பொலியோ.

சங்கு சறடு இணைய பொலியம்மா தாயே பொலி
தாமரையாள் முத்து ஈணப் பொலி பொலி பொலியோ...
முத்துவிப்பான் செட்டி பொலியம்மா தாயே பொலி
முடிசமைப்பான் ஆசாரி பொலி பொலி பொலியோ...

ஆசாரி தச்சனையும் பொலியம்மா தாயே பொலி
அளக்கும் கணக்கனையும் பொலி பொலி பொலியோ...
கணக்கனால் தான் அளந்து பொலியம்மா தாயே பொலி
கந்தர் கதிர்காமம் போறாராம் பொலி பொலி பொலியோ...

ஓடி வளையுங்கோ பொலியம்மா தாயே பொலி
உறுதியுள்ள கால்களாலே பொலி பொலி பொலியோ
வெள்ளி நிலா வெளிச்சத்திலே பொலியம்மா தாயே
விளையாடி வா வாலிகளே பொலி பொலி பொலியோ..

முன்னங்கால் வெள்ளை பொலியம்மா தாயே பொலி
முகம் நிறைந்த சீதேவியாள் பொலி பொலி பொலியோ...
சீதேவியாள் போன இடம் பொலியம்மா தாயே
செங்கமலப் பூப்பூக்கும் பொலி பொலி பொலியோ...

மூதேவியாள் போன இடம் பொலி அம்மா தாயே பொலி
முருங்கை மரம் பூத்து நிற்கும் பொலி பொலி பொலியோ...
முத்து விளைந்த கொம்பன் பொலியம்மா தாயே பொலி
முதலிமார்க்கு ஏற்ற கொம்பன் பொலி பொலி பொலியோ...

தேடிக் கேட்டு எழுதியவர்
**முத்துலிங்கம் பேரின்பராசா**
பிரதேச செயலகம், போரதீவு பற்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் மனம்



தங்கை சொன்னதைக் கேட்டு உறைந்து போய் நடுக்கமடைந்தாள் வினோதா. "அப்பா ஊரில் இல்லை அக்கா! ஒரு கல்யாணத்திற்காக கொழும்பிற்கு போயிருக்கிறார் திரும்பிவர ஐந்து நாட்களாகும். அம்மா பாவம் பயந்தே போயிட்டாங்க. அழுது கொண்டே இருக்காங்க!" இதனைக் கூறும் போதே புவனாவின் குரலும் ஒரு விதமாக மாற்றம் அடைந்து காணப்பட்டது.

"அண்ணனால வீட்டில் நிம்மதியே இல்ல. குடிச்சு குடிச்சு உடம்பக் கெடுக் கிறான். குடி அதிகமாயிடிச்சு. யார் பேச்சையும் கேக்கிறதே இல்ல. இன்றைக்கு ஒரு படி மேல போய் போலீஸ் வரைக்கும் போயாச்சு. அப்பாவுக்குத் தெரிஞ்சா அவ்வளவு தான். அவனை வெளியில் எடுக்க நீங்கதான் எப்படியாவது உதவி பண்ணனும். உன்னைத்தான் நம்பி வந்திருக்கிறேன்" காலில் விழாத குறையாக என்னிடம் புவனா கெஞ்சினாள். எனக்கு என்ன செய்வதென்றே தெரியல்ல.

"பயப்படாதே.... ஏதாவது பண்ணலாம். ஆனா அப்பாவுக்குத் தெரிஞ்சா ரொம்ப கோபப்படுவாரே புவனா....?"

"எப்படித் தெரியும் அக்கா? நாங்க சொல்லமாட்டம். அவருக்குத் தெரியாம பாத்துக்கிறம். பணம் யார் தந்த என்று கேட்டா பக்கத்து வீட்டுல கடன் வாங்கின என்று சொல்லிக்கிறோம் அக்கா."

வினோதா தங்கையின் பேச்சைக் கேட்டு பெரு மூச்சு விட்டாள். வினோதாவை வீட்டார் தலை முழுகி மூன்று ஆண்டுகளா கிவிட்டது. காரணம் வினோ தாவின் காதல் கல்யாணம்தான். வெங்கட்தான் வினோதா வின் கணவன். இருவரும் கல்யாணம் செய்து வீட்டின் முன் நின்ற போது அம்மா அப்பாவை விட அதிகம் கோபப்பட்டவன் தம்பி விக்ரம் தான். அவன் தான் இப்போது போலீஸ் பிடியில்.

இந்த மூன்று வருடத்தில் இவள் எப்படி இருக்கிறாள் என்று அம்மாவோ, புவனாவோ வந்து எட்டிப் பார்த்ததில்லை. "என்னக்கா.... யோசிக்கிற" கவலையுடன் வினவினாள் புவனா.

"ஒண்ணுமில்ல.... இப்ப என்கிட்ட பணம் கையில இல்லை புவனா"

"அக்கா! என்ன இப்படி சொல்லு நீங்க.." விம்மி விம்மி அழுதாள் புவனா

"சரி.... அழாதே! பணம் இல்லாட்டியும் நகையைத் தாரேன்."

பீரோவைத் திறந்தாள். அடுக்கின் நடுவே சில ரூபாய் நோட்டுக்கள் கண்ணில் பட்டன. வியப்புடன் எடுத்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏது பணம்? எப்போது வச்சார்? பரபரப்புடன் பார்த்தாள் வினோதா. எடுத்து எண்ணினாள் எட்டாயிரம் இருந்தது. இதுக்காகவே வைத்தது போலிந்தது. ஆனால் அவரைக் கேட்காமல் எப்படி எடுப்பது? மனம் குழம்பியது அலுவலக வேலையாக நுவரெலியா சென்றிருக்கும் வெங்கட் நாளை தான் வருவார். சரி.... இப்போது யோசிக்க நேரம் இல்லை அவர் இருந்தா லும் நிச்சயம் உதவி செய்திருப்பார் வந்ததும் சொல்லிக் கொள்ளலாம்." அந்தப் பணத்திலி ருந்து ஐயாயிரம் ரூபாவை எடுத்து தங்கை புவனாவிடம் கொடுத்தாள்.

மறுநாள் நுவரெலியாவில் இருந்து திருப்பினான் வெங்கட். குளித்து முடித்து சாப்பிடத் தயாரானான். பாதியில் தொட்டிலில் கிடந்த தன் குழந்தை பாலுவைத் தூக்கி கொஞ்சினான். "என் செல்லக் குட்டி... என் ராஜாக்குட்டி... அப்பா சொல்லு... அப்பா குழந்தை சிரித்தான்."

"வினோதா.... பசிக்குதம்மா...."

இதோ தயாரா இருக்குதுங்க பாலுவை தொட்டிலில் போட்டுத்து உட்கா ருங்க எடுத்து வைக்கிறேன்" அவள் பரிமாற சாப்பிடத் தொடங்கினான் வெங்கட்.

"பயணமெல்லாம் எப்படீங்க?" என்று கேட்டாள் வினோதா.

"ம்ம்.... பரவாயில்லை போன காரியம் சுகமா முடிஞ்சுது. ஆனா என்ன... சாப்பாடுதான் ஒடம்பில ஒட்டல. என்ன இருந்தாலும் நீ சமைக்கிற மாதிரி வருமா வினோதா...?" என்றான் வெங்கட்.

"சரி சரி, உங்கட கேலிப் பேச்சு போதும் கதைய விட்டுத்து சாப்பிடுங்க..." என்று தண்ணீர் டம்ளரை அவன் அருகில் வைத்தாள்.

"அப்புறம் ஒரு விஷயம் வினோதா....?"

"என்ன விஷயம் சொல்லுங்க......"

"இன்னும் மூன்று நாளில் நான் யாழ்ப்பாணம் போறேன் வினோதா."

"யாழ்ப்பாணத்திற்கா? இப்பதானே நுவரெலியாவிற்கு போனீங்க? உங்கட அலுவலகத்தில உங்களை ரொம்பதான் பிழிஞ்சு எடுக்கிறாங்க?"

"யாழ்ப்பாணத்திற்கு அலுவலகத் தால அனுப்பல்ல. நண்பர்கள் ஆறு பேர் சேர்ந்து சுற்றுலா போறோம். நாலு நாள் கழிச்சு தான் வருவோம்."

"சுற்றுலாவா.....? அதுவும் நாலு நாளா....? பணம் நிறைய செலவாகுமே.....! இந்த வீடு கட்டுறத்திற்கு வாங்கின கடனையே இன்னும் அடைக்கலியே? நேற்றுக் கூட நமக்கு வட்டிக்கு காசு தந்த கந்தசாமி அண்ணன் வந்து கேட்டுத்துப் போறார் நீங்க வீட்டில இல்ல வந்ததும் சொல்லுறன் என்று அவரை அனுப்பி வைச்சேன்."

"எனக்குப் புரியுது வினோதா வீடு கட்டினது. அலுவலக வேலை என்று தொடர்ந்து ஓய்வே இல்லாம இருக்கேன். எனக்கும் ஒரு மாற்றம் தேவை! அதனால் தான் எங்கிட்ட நண்பர்கள் வற்புறுத்தி னாங்க... அதுதான் இதுக்காகவே அலுவலக நண்பனிட்ட எட்டாயிரம் ரூபாய் கடன் வாங்கினேன். அவசரத்தில பீரோவில் துணி நடுவிலே வச்சிட்டுப் போனேன். போய் அதை எடுத்திட்டு வா....." திருடனுக்கு தேனி கொட்டியது போல விழித்தாள் வினோதா.

"கடன் வாங்கின பணமா...? ஏங்க அது வந்து"

"என்னாச்சு வினோதா....?"

"நான் உங்ககிட்ட ஒரு விஷயம் சொல்லுவேன் தப்பா நினைக்கமாட்டீங் களே?"

"நான் அந்தப் பணத்திலேருந்து அஞ்சாயிரம் ரூபாய் எடுத்திட்டேங்க"

"என்னது அஞ்சாயிரமா.....? அவ்வளவிற்கு என்ன செலவு உனக்கு?

அது வந்துங்க..... நேற்று புவனா நம்ம வீட்டுக்கு வந்திருந்தாள். அப்பா ஊரில இல்லையாம். தம்பி விக்ரமை போலீஸ் பிடிச்சித்தாங்களாம். அவனை வெளியில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுக்க அஞ்சாயிரம் தேவை என்று கண் கலங்கி நின்றாள். அதுதான்..... குடுத்திட் டேங்க. என்னை மன்னிச்சிடுங்க."

அவ்வளவுதான்! சோற்றுடன் தட்டுப் பறந்தது. எவன் வீட்டுப் பணத்தை எடுத்து எவனுக்குத் தாறது? வாசலில நிக்க வச்சு அனுப்பினானே உங்க அப்பா! மறந்துட்டயா....? உன் பிறந்த வீட்டில ஒரு பிரச்சனை என்றால் எதைப் பத்தியும் யோசிக்காம தூக்கிக் கொடுத்திட்ட. எவ்வளவுதான் நான் கஷ்டபட்டு உன்னை நல்லா வச்சிருந்தாலும் உனக்கு பிறந்த வீட்டுப் பாசம் போகல.... என்னை விட உனக்கு உன் குடும்பந்தான் முக்கியம்" என ஆத்திரத்தில் கத்தினான்.

"அதில்லங்க... அவ பாவம்?

"பேசாத! பாவமும் புண்ணியமும். அவங்களுக்கு நான் வேணாம். ஆனா என் பணம் மட்டும் வேணுமா? இவ்வளவு தான் கொடுத்திருக்கிறயா? இல்ல எனக்குத் தெரியாம இன்னும் ஏதாவது கொடுத்திருக் கிறயா?"

அன்று முழுக்க அவன் குடும்பத் தாரைத் திட்டிக் கொண்டே இருந்தான். யாழ்ப்பாணத்திற்கு போக முடியாத கோபத்தில் வினோதாவிடம் அவன் பேச வில்லை ஒரு மாதம் கடந்தது. அலுவலகம் முடிந்து வந்தவனுக்கு தேநீர் கொடுத்தவள் தயங்கி தயங்கி நின்றாள்.

"என்னங்க...."

"என்ன?" என்று அவளைப் பார்த்தவன் திடுக்கிட்டான். இரு கைகளிலும் அணிந்திருந்த நான்கு பவுண் வளையல் களைக் காணவில்லை.

"ஏய் வளையல்கள் எங்கே...?"

"என்னை மன்னிச்சிடுங்க!" என்று அழுதபடி காலில் விழுந்தாள்.

"என்னாச்சு சொல்லு..."

"இண்டைக்கு நம்ம வீட்டுக்கு மாலினியும் அவ கணவனும் வந்திருந்தாங்க.

"என் தங்கை மாலினியா...."

"ஆமாங்க. அவள்ற கணவன் அலுவலகப் பணத்தை தொலைச்சிட்டாராம். இண்டைக்குள்ள பணத்தை திருப்பி செலுத்தலேன்ன வேலை போயிடுமாம். இரண்டு லட்சம் குறையுது என்று வந்து நின்றாங்க. அவருக்கு வேலை போயிடுச்செண்டா..... வாழ்க்கை நடத்துறது கஷ்டம் என்று சொன்னாங்க. அது தான் நீங்க அடிச்சாலும் பரவால்ல என்று..... இந்த மாதிரி நேரத்தில கூட உதவ லேன்னா, காலம் முழுக்க நம்ம மேல தப்பான எண்ணம் வச்சிடுவாங்க. உதவிக் காகவாவது உறவுகள் நம்மளத் தேடி வருதே என்று சந்தோசப்படுவம்....." என்று சொல்லி முடிந்தாள்.

அவளின் உள்ளத்து உணர்வு இப்போது தான் அவனுக்கு பளிச்செனப் புரிந்தது.

"மன்னிச்சிடுங்க..." என்றாள் வினோதா.

"மன்னிக்கணும் வினோதா. நான் உன் வீட்டுக்காரர்களை எவ்வளவு கேவலமாய் பேசினேன். ஆனா நீ அதை மறந்து என் தங்கைக்கு பெரிய உதவி பண்ணி இருக்கியே!

"உதவுகின்ற மனப்பான்மையில் வினோதாவிற்கு பிறந்த வீடு, புகுந்தவீடு என்கிற பேதம் கிடையாது. நான் தான் அவளை எவ்வளவு தவறாக எண்ணிட்டன்."

வெங்கட்டுக்கு தன்னை நினைக்க வெட்கமாய் இருந்தது. தனது மனைவியின் பெருந்தன்மையை கண்டு பூரிப்படைந் தான். "எவ்வளவு நல்ல மனசு! இப்படிப்பட்ட ஒருவள் தனக்கு மனைவியாய் கிடைத் ததையிட்டு சந்தோசத்தின் உச்ச கட்டத் திற்கே சென்று விட்டான் வெங்கட்.


**செல்வி யோ. வினோதினி**
மட்/பட்/வெல்லாவெளி க.ம.ம.வித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய் ....

தாய் என்னும் ஸ்தானம்
தரணியிலே பெறுவதற்கு
தூயவளே நீயிங்கு
தவமென்ன செய்தனையோ?



கருவறையைக் கனமாக்கினாய்
கருவாக்கி எனை உருவாக்கினாய்
பரமனாம் பிரமனுக்கே நிகருமானாய்
பாரினிலே ஒப்பரிய தெய்வமானாய்

செத்தாய் பிழைத்தாய்
சீவன் எனைப் பிரசவித்தாய்
சொத்தானாய் முத்தானாய்
சரீரத்தின் சத்துமானாய்



தொப்புள் கொடி தந்தாய்
தொட்டிலாயும் அதை ஈந்தாய்
அப்பப்பா அதி போசனம் தந்தாய்
அளவிறந்த சக்தி தந்தாய்

முலைவளம் உளமகிழ்ந்து தந்தாய்
மூளை வளமும் உவந்து ஈந்தாய்
கலை வளமும் கனக்கத் தந்தாய்
கலைஞனாயும் எனையாக்கித் தந்தாய்

அன்பு வழியும் காட்டினாய்
அனவில் நடக்கும் திறனும் காட்டினாய்
என்புக்கே தென்பு தந்தாய்
எனக்கென்றும் துணிவு தந்தாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனுக்குலத்தின் மாதாவுமானாய்
மக்கள் போற்றும் மாதரசியுமானாய்
எனக் கென்றும் விழியானாய்
இவ்வுலகுக் கென்றும்
நல்லொளியானாய்



ஓங்கார மந்திரமும் நீயானாய்
உலகத்தின் அச்சாணி தானுமானாய்
சிங்கார மெழுகுவர்த்தி அதுவுமானாய்
செகம் சிறக்க வைக்கின்ற
தேவியுமானாய்

சிற்பியாய் சீரியநல் வைத்தியனாய்
நீயானாய்
செகம்வாழ வைக்கின்ற சேவகி
தானுமானாய்
சற்குருவும் நற்குருவும் நீயேயானாய்
சகலகலை போதிக்கும்
கலையரசியுமானாய்



கற்பக தருவும் நீயே தாயே
கலங்கரை விளக்கமும் நீயே தாயே
பொற்புடைய பூமகளும் நீயே தாயே
பூமியிலே உயர்ந்த நற் சக்தியும் நீயே

அட்சய பாத்திரமும் நீயேயம்மா
அமுத சுரபியும் நீயேயம்மா
நிட்சயமாய் சொல்கின்றேனே
நீயில்லை என்றால் உலகே
இல்லையம்மா

செல்வி க. வினு
கோவில்போரதீவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்டமும் சாட்டை அடியும்

கண்ணடித்துக் கண்ணடித்து கண்ணம்மாவைக் கரம்பிடித்த நடன தாசருக்கு கண்ணம்மாவின் ஊரிலுள்ள மாரியம்மன் கோவில் சடங்கில் தெய்வமாடும் நிகழ்வு நன்றாகப் பிடித்து விட்டது.

"சா... எவ்வளவு சூப்பரா ஒவ்வொரு வரும் ஆடுறாங்க ... பாலாவதனன் எண்டா பாலாவதனன்தான். காத்தாண்ட ஆட்டமோ ஆட்டம்... காளிக்கு ஆடுறது அதையும் விடமேல. நாககன்னிக்கு ஆடுறதோ அதையெல்லாம் மிஞ்சி... மேலசொன்ன எல்லாத்தையும் விட மாரியம்மனுக்கு ஆடுறவர் ஆட்டமோ வாயால சொல்லி வேலல்ல... இப்பிடி நாமளும் ஏன் ஆடப்புடாது? என்று அவரைஆட்டிப்படச்சிக் கொண்டே இருந்திச்சு.

மறுநாள் விடிஞ்சதும் விடியாதது மாக எழும்பிக் குந்திக் கொண்டிருந்த நடனதாசர் குறை நித்திரைக் கண் ணோடு படுக்கையில் புரண்டு கொண்டிருந்த கண்ணம்மாவைக் கத்தி எழுப்பினார் "கண்ணம்மோவ்...... கண்ணம்மா இண்டைக்கு நானும் கோயில்ல ஆடப் போறன்" என்று வீறாப்புக் கொண்டு கூவினார்.

"என்ன ஆடப்போறயளா? உங்களுக் கென்ன பயித்தியமா புடிச்சிருக்கு? அதுவும்... போயும் போயும்.. எங்க ஆடப்போறாரெண்டு..?" கண்ணம்மா அலுத்துக் கொண்டே மேலும் சுருண்டாள்.

கண்ணம்மா! என்னம்மா! உன்ர கத? நம்மரெண்டு பேரும் நேற்று கோயிலுக்குப்போய் வரக்க....ரோட்டால போன வந்த சனங்கள்ற கதையெல்லாம்



தெய்வமாடுறவங்கட கத யளாத்தான் அல்லவா இருந்திச்சு? தெய்வமாடுறவயள்ற புகழ் தேசமெல்லாம் பரவியிருக்கிறத இதால நீ அறியல்லயா? அதே போல நானும் ஆடுனனெண்டா நமக்கும் பெரும் புகழ் வருமில்லையா? உனக்கு எனக்கெல்லாம் மதிப்பும் மரியாதையும் பாராட்டுகளும் வந்து வந்து குவியுமில்லையா?

"நான் தெய்வம் ஆடுறதால உனக்குத்தான் முக்கால்வாசி புகழும் வந்து சேரும் பாரு! கண்ணம்மாட புருசனும் இந்த வருசம் தெய்வமாடுறாரு எல்லாரையும் விட என்ன திறமா மனுசன் ஆடுறாரு! அயலூரிலிருந்து வந்து முடிச்ச மனுசனவர். ஆடுற ஆட்டத்தப் பாத்தா நமக்கும் ஆடோணும் போல இருக்கே.... என்றெல்லாம் இந்த ஊர்ச்சனங்கள் கதைக்கும் போது நமக்கு எவ்வளவு பெரும... நம்மட அந்தஸ்து கௌரவம் எல்லாம் என்னமாதிரியா உயரும் புள்ள..." நடனதாசர் நியாயங்களை ஒன்றன் பின் ஒன்றாக அடுக்கி அடுக்கி உரைத்துக் கொண்டே போனார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணம்மாவுக்கோ தன் கணவனாரின் கதையைக் கேட்கக் கேட்க ஒருபக்கம் சினமாகவும் மறுபக்கம் சிரிப்புச் சிரிப்பாகவும் வந்தது.

"விடிஞ்செழும்பினா கரப்பும் அத்தாங்குமா குளத்துக்க கிடந்து விடியுறயள்...! தவறண தவறணயா அலஞ்சலஞ்சி நல்லா முழுகித்து வாறயள்...! இதப்போல என்னென்னவோ வேற...! இப்பிடிப்பட்ட நீங்களா கோயில்ல தெய்வமாடப் போறயள்? அப்படி எண்டா கோயிலும் ஊரும் உருப்பட்ட மாதிரித்தான். மாரித்தாயே இந்த நாடகத்த நீ தான் பாரம்மா..." என மூச்சே விடாமல் கூறி முடித்தாள் கண்ணம்மா.

நடனதாசரோ அவள் கூறிய எதையுமே மூளைக்குள் உள்வாங் காதவராய்...! "என்ர பேரப் பாத்தயா? நடனதாசர்... அட இதக் கூட நீ அறியாம இருக்கயே. விசித்திரமாக் கிடக்கு" என அலுப்புச்சலுப்பாய் சிணுங்கினார். கோயில்ல சடங்குப் பூசைக்கு ஆயத்தம் நடந்தது தெய்வமாடுவோரெல்லாம் அம்பாளிடமிருந்து பத்திரம் பெற்று ஆடுவதற்காக வரிசையாக இருமருங்கிலும் நிற்கிறார்கள். அவ்விருமருங்கும் பக்தகோடி களும் திரளாக இருக்கிறார்கள். அவர்களுக் குள்ளே நடனதாசரும் மனைவியும்...

அம்பாள் தெய்வமாடுவோருக்கு பத்திரம் கொடுத்து வருகிறது... பத்திரத்தைப் பெற்றவர்கள் உருக்கொண்டாட நடன தாசரோ எவருமே சற்றும் எதிர்பாரா விதமாக... "காய் ...காய்..... காய்....காய்...." என்று கத்தியபடி கிளம்பி ஆடத் தொடங் கினார். புதியவராதலால் இது என்ன தெய்வம்? இந்தப் பூமரத்தில என்ன இரிக்கி எனச் சோதிப்பதற்காக காளியம்மன் பந்தலுக்கு முன்னால் நிறுத்தி "உன்னில என்ன நிக்கி?" என்று துணைப்பூசகர்களும் மந்திரிப்போரும் ஒன்றாகவே கேட்டதற்கு எதுவுமே சொல்லாமல் "காய்... காய்.. காய்.." என்று மட்டுமே கத்திக் கொண்டே ஆடிக்கொண்டே இருந்தார் நடனதாசர்.

அடிக்கு மேல் அடியாக சாட்டையடியை இருகால்களிலும் இருவர் சேர்ந்து அடித்துக் கொண்டிருக்க "சொல் ... சொல்...." என மற்றொரு உதவிப் பூசகர் கேட்க எதற்குமே விடையிறுக்காத நடனதாசர் ஆடிக் கொண்டே இருந்தார். சாட்டையடி விடா மழையாக தொடர்ந்தது.

அடிதாங்க முடியாத அவர் தன் வேடம் கலைந்தவராய் "கண்ணம் மோவ் கண்ணம்மா... என்ன அடிச்சுக் கொல்லப் போறாங்க ... என்னால தாங்கேலாம இரிக்கி ஓடிவா.... ஓடிவா.... என்னில ஒரு தெய்வமும் இல்லப்பா... என்ன நம்புங்க" என்ன விட்டுருங்க என கூச்சலிட்டுக் கத்தியபடியே இருட்டோடு இருட்டாக ஓடி மறைகிறார்.

கண்ணம்மாவோ "காணுமா சாட்டயடி? இதுக்குத்தானே கிடந்து துடிதுடிச்ச... ஆரிட்டயும் எங்கயும் விடுற சேட்ட இந்த அம்மன் கோயில்ல விடேலாது" என்று சொல்லியபடியே கணவனைப் பின்தொடர்ந்து ஓடுகிறாள்.

(யாவும் கற்பனை)

**கன்னிமுத்து சரவணன்**
வெல்லாவெளி, கோவில்போரதீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்ணிச் சோறும் கிழங்குக் கறியும்

**பாலையடிவட்டை பவளம்**

பட்டினிச் செல்லையா என்றாலே
பலருக்கும் தெரிந்ததுவே
சுற்றுப்புறம் சூழ்ந்து வர
முற்றத்திலே தாயும் சேயுமாய்
நிலாச்சோறு உண்பதிலே
ஆனந்தம் ஆனந்தம்

பானையிலே ஒரு பிடியும்
சட்டியிலே இரு பிடியும்
வரிசைக்கிரமமாக
பந்திபோடும் சேனையது
ஊரெல்லாம் பேசினாலும்
உட்காந்திருந்ததில்லை

பன்னாங்கு பாயினிலே
படுத்து உறங்கையிலும்
காலைச் சேவலது
கருணையுள்ளம் கொண்டது போல்
யாருக்கும் வந்ததில்லை

கோவணத்துண்டுடனே
குவளையிலே தண்ணீர் கொண்டு
மறு நாள் மலர்வதற்கு
வயல் காடு தஞ்சம் என
வரம்பு யர்த்திக் கட்டுகையில்
கடகடப்பு முடு முடுப்பு
வயிற்றுக்குள்
அடிக்கடி அவளைத்தேடும்
வழிகளின் மயக்கம் கூட
ஒரு போதும் வராத
முரட்டுக் கோபம் அவ்வப்போது
சென்ற கிராப் பொழுது
நினைவுக்குள் மலர்கின்றது
அடிப்பானைச் சோற்றுக்குள்
ஊற்றி வைத்த நீரும்
அண்டாச் சட்டிக்குள்
ஆக்கிவைத்த கிழங்குக் கறியும்
எமைச்சேரும் நேரம்
இன்னுமா இருக்கு என்று

பாசக்கார மனிசி பாவாட
உயர்த்திக்கட்டி
வரம்பால வாறழகில்
பாதிப்பசி பறந்தேயாகிற்று

அடிப்பற்றிய சோற்றுக்குள்
ஊற்றிவைத்த நீரமுதம்
உப்பூத்தி பிசைந்து
வேக வைத்த கிழங்கு கறியும்
மனசார வாழ்த்தும்
மங்கள நிகழ்வு போல்
மீண்டுமொரு நாளை
நினைத்து பார்க்கையில்
பட்டினிச் செல்லையாட
பாசத்திற்கு நிகரேது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவம் பெறும் கலைஞர்கள்



**முழுப் பெயர்** : **திருமதி சரஸ்வதி ஆசீர்வாதம்**
**முகவரி** : **37/79ம் கிராமம்,**
**பாலையடி வட்டை, வக்கி எல்ல.**
**பிறந்த திகதி** : **25.01.1956**
**வயது** : **61**
**கி. சே.பிரிவு** : **பாலையடி வட்டை**
**தொழில்** : **விச வைத்தியம்**

மேற்படி கலைஞர் தனது கணவரின் கலையை பின் தொடர்ந்து ஆற்றி வரும் கலைஞராவார். தமது கணவர் விச வைத்தியத்துடன், சிற்பம், ஓவியம் வரைதலிலும் சிறந்தவராக காணப்பட்டவர். தனது கணவர் 1988 ஆம் ஆண்டு மறைவினை எட்டும் சமயத்தில் "தன்னை நினைத்து எந்த விசக்கடியானாலும் நோயாளியின் கால் பெருவிரலை பற்றி மூன்று தடவை அழுத்திவிட்டு வெறும் நீரை மட்டும் தீர்த்தம் போல் கொடுத்தால் விஷ நோய் தீரும்" எனக் கூறினார். அதேபோன்று இற்றைவரை தான் சேவையாற்றிவருவதாகவும் கூறும் இவரால் அனேகர் விசக்கடி மரணத்திலிருந்து காப்பாற்றப் பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே பாரம்பரிய வைத்திய முறைகளை அழியாமல் பாதுகாத்து வரும் இக் கலைஞர் தமது சேவைகளை இப் பிரதேசத்திற்கு ஆற்றி வருவதையிட்டு பாராட்டி இக் கௌரவத்தினை வழங்குவதில் பெருமிதம் அடைகிறது போரதீவுப் பற்று கலாசார பேரவை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**முழுப் பெயர் : கணபதிப்பிள்ளை சோமசுந்தரம்**

**முகவரி : பிரதான வீதி, பெரிய போரதீவு.**

**பிறந்த திகதி : 1955.03.30**

**வயது : 62**

**கி. சே.பிரிவு : பெரிய போரதீவு.**

**தொழில் : பித்தளை, உலோக வேலை.**

இவர் கணபதிப்பிள்ளை முத்துப்பிள்ளை தம்பதிக்கு 1955.03.30 ஆம் திகதி முனைத்தீவு கிராமத்தில் பிறந்தார். 1957 ஆம் ஆண்டு கல்லோயாக் குடியேற்றத் திட்டத்தின் கீழ் 40ம் கிராமத்தில் குடியேறி வாழ்ந்து வரும் போது ஆரம்பக் கல்வியை 40ம் கிராமம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் 03ம் வகுப்புவரை கற்றுள்ளார்.

அதன் பின்பு தந்தைவழித் தொழிலான பித்தளை வேலையை பழகிச் செய்து வந்தார். 1972 ஆம் ஆண்டு பெரிய போரதீவைச் சேர்ந்த இராமநாதன் பரமேஸ்வரி என்பவரைத் திருமணம் செய்து மாமனார் இராமநாதன் அவர்களும் இதே தொழிலைச் செய்து வந்ததனால் 1972ஆம் ஆண்டு முதல் இன்று வரை இப் பணியை மேற்கொண்டு வருகின்றார்.

மேலும் வவுணதீவு பிரதேச செயலக பிரிவு, பட்டிப்பளைப் பிரதேச செயலகப் பிரிவு, வெல்லாவெளிப் பிரதேச செயலகப் பிரிவு, களுவாஞ்சிகுடி பிரதேச செயலகப் ஆகிய பிரிவுகளில் உள்ள பல ஆலயங்களில் இவரது பரம்பரையினரால் செய்து கொடுக்கப்பட்ட பித்தளையிலான பூசைப் பொருட்களான மணிகள், விளக்கு வகைகள், தீபங்கள், சிலம்பு, அம்மானைக்காய், விக்கிரக முகக்களைகள், பாத்திரங்கள் என்பன கலையம்சம் பொருந்தியவையாக இன்றும் காணப்படுகின்றன. அத்துடன் பித்தளையினாலான வீட்டு பாவனைப் பொருட்களையும் இன்றும் பல வீடுகளில் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர் : வைகாளிப்போடி கார்த்திகேசு**

**முகவரி : விவேகானந்தபுரம்**

**பிறந்த திகதி : 1929.03.15**

**வயது : 88**

**கி.சே. பிரிவு : விவேகானந்தபுரம்**

**கலைத்துறை : கிராமிய விச வைத்தியம்**

இவர் எருவில் கிராமத்தில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி பயின்று தமது வம்சாவழியாக செய்து வந்த விச வைத்திய துறையை செய்து வருகின்றார்.

தனது தந்தையை குருவாக ஏற்று செய்யப்பட்டு இப் பிரதேச மக்களுக்கு விச வைத்தியத்தை நம்பிக்கையுடன் ஆற்றி வரும் இவரை ஒரு சிறந்த வைத்தியராக மக்களால் மதிக்கப்பட்டு வருகின்றார்.

தற்பொழுது இவரின் முதுமை நிலை காரணமாக இவரின் மகள் கார்த்திகேசு தைரியம்மா அவர்களை பின் தொடர்ந்து வருவதும் குறிப்பிடத்தக்கதாகும். இருந்தும் நோயாளியை தங்க வைத்து வைத்தியம் செய்வதற்குரிய இடவசதியை இவரிடம் போதாமல் உள்ளது இவரின் ஒரு குறைபாடாக உள்ளமையை வெளிப் படுத்தும் இக் கலைஞர் இப் பிரதேசத்தில் ஆற்றிவரும் சேவைகளை பாராட்டி போரதீவுப்பற்று பிரதேச கலாசாரப் பேரவை கலைஞர் கௌரவம் வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர்** : **நடராஜகுரு பிறேமதாசன்**
**முகவரி** : **பிரசாந்தி, சத்தியசாயி வீதி, மண்டூர்.**
**பிறந்த திகதி** : **10.06.1944**
**வயது** : **73**
**கி.சே. பிரிவு** : **மண்டூர்**
**கலைஞர் துறை** : **விச வைத்தியம், ஹோமியோபதி வைத்தியம்.**

போரதீவுப்பற்று பிரதேச செயலக பிரிவினுள் மண்டூர் கிராமத்தில் வசிக்கின்ற பாரம்பரிய வைத்தியத் துறையான விச வைத்தியம் மற்றும் ஹோமியோபதி வைத்திய முறைகளில் சேவையாற்றி வரும் இவர், ஆன்மீகம் மற்றும் சமூக சேவைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டு விளங்குகிறார். ஆன்மீக சொற்பொழிவாளராகவும் காணப்படும் இவரை இப் பிரதேசத்திற்கு ஆற்றி வரும் சேவைக்காக இக் கௌரவம் வழங்கி பெருமிதம் அடைகின்றது போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் பேரவை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**முழுப்பெயர் : சின்னவன் மாமாங்கன்**
**முகவரி : பிலாலி வேம்பு, வெல்லாவெளி.**
**பிறந்த திகதி : 1948.06.17**
**வயது : 69**
**கி.சே. பிரிவு :**
**கலைத்துறை : பறைமேளம்.**

இவர் தமது ஆரம்பக் கல்வியை மட்/களுதாவளை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்றது முதல் தமது தந்தையுடன் பகுதி நேர தொழிலாக பறை மேளம் அடிக்கும் வேலையில் ஈடுபட்டார். இவர் தமது பரம்பரை வழியாக தமது தொழிலைக் கற்றதுடன் தமது தந்தையை மானசீக குருவாக கொண்டவர்.

இவர் 15 வயது முதல் தனியாக தமது தொழிலை ஆரம்பித்து ஆலயம், மரணவீடு, மற்றும் விசேட வைபவங்கள், பிறைசித்தம் போன்ற நிகழ்வுகளில் இவர் பறை மேளம் வாசித்து வருவது குறிப்பிடத்தக்கது. அத்துடன் பறையுடன் சேர்த்து வாத்தியங்களையும் வாசிப்பதில் வல்லவராகவும் காணப்படுகின்றார். இவர் இப் பிரதேசத்தில் மட்டுமன்றி ஏனைய பல பிரதேசங்களிற்கும் தமது கலைத்தொழிலை ஆற்றி வருகின்றார்.

எனவே மறைந்து வரும் இக்கலையை அழியாமல் பாதுகாத்து வரும் இக் கலைஞரை பாராட்டி கௌரவம் வழங்குவதில் போரதீவுப்பற்று பிரதேச செயலகம் மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழா சிறப்புற நிதிதந்து உதவியோர்

| | | |
|---|---|---|
| 01. தசானி ஹாட்வெயார் | கோவில்போரதீவு | 5000.00 |
| 02. ஸ்ரீ அருள் ஜுவலறி | கோவில்போரதீவு | 5000.00 |
| 03. எஸ்.ஆர். ஜுவலறி | கோவில்போரதீவு | 5000.00 |
| 04. சு.விக்னேஸ்வரன் | திருப்பழுகாமம் | 5000.00 |
| 05. G.வேணு | திருப்பழுகாமம் | 5000.00 |
| 06. N.G அருள் ஸ்ரோர்ஸ் | பெரியபோரதீவு | 5000.00 |
| 07. K.துரைநாயகம் | பெரியபோரதீவு | 5000.00 |
| 08. துர்க்கா ஜுவலறி | பெரியபோரதீவு | 5000.00 |
| 09. லக்ஸ்மி ஜுவலறி | திருப்பழுகாமம் | 5000.00 |
| 10. STN ஹாட்வெயார் | திருப்பழுகாமம் | 5000.00 |
| 11. வெள்ளிமலை | திருப்பழுகாமம் | 5000.00 |
| 12. திவாரத்தகி போன் சொப் துவாரகி பென்சி | கோவில்போரதீவு | 5000.00 |
| 13. திரு.ச.வரதராஜன். | பலாச்சோலை | 5000.00 |
| 14. BOC வெல்லாவெளி | வெல்லாவெளி | 2000.00 |
| 15. திரு.தெ.சிவபாதம் | தும்பங்கேணி | 2000.00 |
| 16. ஸ்ரீ கரணி ஜுவலரி | 39ம் கிராமம் | 2000.00 |
| 17. தாஸ் ஸ்ரோர்ஸ் | 39ம் கிராமம் | 1500.00 |
| 18. திருமதி.மலர் சிவராஜா | மண்டூர் | 1500.00 |
| 19. திரு.கா.குணசேகரம் | திக்கோடை | 1000.00 |
| 20. திரு.கு.யுகாந்தன் | திக்கோடை | 1000.00 |
| 21. திரு.வே.தர்சன் | திக்கோடை | 1000.00 |
| 22. விநாயகம் ஸ்ரோஸ் | 39ம் கிராமம் | 1000.00 |
| 23. ஸ்ரீ ஸ்ரீ நகைமாளிகை | திக்கோடை | 1000.00 |
| 24. கலை ஸ்ரோஸ் | திக்கோடை | 1000.00 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போரதீவுப் பற்றுப் பிரதேச கலாசார விழா
## சிறப்புற வாழ்த்துகின்றோம் ....!

உங்கள் இல்லங்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும்
மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள

**Thivarthaki Phone Shop**
**& Thuwarahi Fancy**

பிரதான வீதி, கோவில் போரதீவு.
தொ.பே.: 065 2056486, 077 8205214

---

படுவான் மக்களின் மனங்கவர்ந்த நம்பிக்கையான நகைமாளிகை



**லக்ஷ்மி ஜுவலரி**



பிரதான வீதி, பழுகாமம்-02.
தொ.பே.: 076 5323366

---



மக்கள் மனங்கவர்ந்த 22 கரட் நகைகளின் சோலை

**துர்க்கா ஜுவலரி**



பிரதான வீதி, பழுகாமம்.
தொ.பே.: 065 2251416, 077 7215872

---

**MR.K.THURAINAYAGAM**

**Dealer : Lanka Filling Station**

**வாகனங்களுக்கு தேவையான ரயர், ரியூப்,**
**மற்றும் ஒயில் வகைகளையும் பெற்றுக் கொள்ளலாம்.**

பிரதான வீதி, பெரியபோரதீவு.
தொ.பே.: 065 2251624, 065 4900104, 077 1308566



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**போரதீவுப் பற்றுப் பிரதேச கலாசார விழா**
**சிறப்புற வாழ்த்துகின்றோம் ....!**

உங்கள் இல்லங்களுக்குத் தேவையான அனைத்துவிதமான
மளிகைப் பொருட்களையும்
மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள

# என். ஜீ. ஸ்ரோர்ஸ்

**பல்பொருள் வாணிபம்**

பிரதான வீதி, பெரியபோரதீவு.
தொ.பே.: 065 2056566, 077 9589246

---

**படுவான் மக்களின் மனங்கவர்ந்த நம்பிக்கையான நகைமாளிகை**



# ஸ்ரீ அருள் ஜுவல்றி



பிரதான வீதி,
கோவில்போரதீவு.

---

**மக்கள் மனங்கவர்ந்த 22 கரட் நகைகளின் சோலை**



# எஸ். ஆர். ஜுவெலறி



பிரதான வீதி, கோவில்போரதீவு.
தொ.பே.: 065 2056483, 077 7719788

---

உங்களுக்குத் தேவையான அனைத்துவிதமான கட்டடப் பொருட்களையும்
உத்தரவாதத்துடன் மிகக் குறைந்த விலையில் கொள்வனவுசெய்ய

# S.T.N
# Hardware & Electricals

பிரதான வீதி, பழுகாமம்-2
தொ.பே.: 065 2056566, 077 9589246


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றிகள் .......!

எமது பிரதேச கலாசார விழாவானது இவ்வருடம் கடந்த இரு ஆண்டுகளுக்கான "மருதம்" சிறப்பு மலர்களுடன் இவ் ஆண்டுக்கான மலரும் சேர்த்து மூன்று மலர்கள் ஒரே விழாவில் வெளியிடப்படுவது சிறப்பு அம்சமாகும். விழா துரிதமாக இடம் பெறுவதற்கு எமக்கு ஆலோசனைகளை வழங்கி, வழிகாட்டிய எமது பிரதேச செயலாளர் ஆர். ராகுலநாயகி அம்மணி அவர்களுக்கு முதற்கண் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

விழா தொடர்பான செயற்பாட்டினை நெறிப்படுத்தி, அவ்வப்போது ஆலோசனைகளை வழங்கிய உதவிப் பிரதேச செயலாளர் திரு. எஸ். புவனேந்திரன் அவர்களுக்கும்

விழா சிறப்பாக நடைபெறவும் மருதம் மலர் சிறப்புறவும் சகல வழிகளிலும் ஒத்துழைப்புக்களை வழங்கி பக்கத் துணையாக நின்ற கலாசார பேரவை உறுப்பினர்களுக்கும்

மருதம் மலரில் இடம் பிடிக்கும் ஆக்கங்களை தந்துதவிய எழுத்தாளர்கள் அதனை ஒழுங்கமைக்க உதவிய மலர்க்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும்

கலாசார விழாவின் போது கௌரவிக்கப்படவுள்ள கலைஞர்களை தெரிவுசெய்த கலைஞர் தெரிவுக் குழுவினருக்கும்

கலாசார ஊர்வலம், கலை நிகழ்வுகளுக்கான கலை நிகழ்ச்சிகளை தந்துதவிய பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், பங்குபற்றிய மாணவர்களுக்கும்

விழா சிறந்த முறையில் நடைபெறுவதற்கு நிதி உள்ளிட்ட அனைத்து விடயங்களையும் மனமுவந்து வழங்கிய வர்த்தகர்கள், அமைப்புக்கள், சங்கங்கள், ஆலய நிருவாகங்கள் அனைவருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2016, 2017 ஆம் ஆண்டுகளுக்கான மருதம் சிறப்பு மலர்களை பதிப்புச் செய்வதற்குரிய நிதி அனுசரணையை வழங்கிய எமது பிரதேசத்தைச் சேர்ந்த லாவண்யா ஜுவல்லரி உரிமையாளர் திரு. செ. பாக்கியராஜா அவர்களுக்கும்


விழாவை ஒழுங்கமைப்பதற்கு பக்கத்துணையாக நின்ற விழாக் குழுவினர் மற்றும் எமது சக ஊழியர்களுக்கும்

விழாவைச் சிறப்பித்த விருந்தினர்கள், கலைஞர்கள், பொது அமைப்புக்களின் உறுப்பினர்கள், பொதுமக்கள் அனைவருக்கும்

மலரினை சிறந்த முறையில் அச்சுப்பதிப்பினை மேற்கொண்ட மாருதி அச்சகத்தாருக்கும்

**எனது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவிப்பதில் மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றேன்.**

**திரு.ச.சோமசுந்தரம்**
(கலாசார உத்தியோகஸ்தர், கலாசார பேரவை செயலாளர்),
போரதீவுப் பற்று.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org